# சாளரம்

இளையோர் திங்கள் இதழ்

விலை 15/-

ஜனவரி - 1994

க. நகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

## நினைவுகள் கரையேறும் அலைகளாகி மீண்டும் மீண்டும்...





அறிவியல்

சமூகவியல்

அரசியல்

விளையாட்டு

மாணவர் பக்கம்

பொது அறிவைப் பெற்றால் முழு மனிதன் ஆகலாம்

## உங்களுக்குத் தேவையான வாகன சேவை!

மங்களகரமான திருமணம் மற்றும், விசேட வைபவங்களுக்கு அழகிய, ராசியான OXFORD கார் சேவையை நாம் உங்களுக்கு வழங்குகிறோம்.

உங்கள் உழவு இயந்திர தேவைகளுக்கும் எம்மை நாடுங்கள்

தொடர்பு:

# அம்பாள் ரான்ஸ்போட் சேவிஸ்

நவாலி வடக்கு, மானிப்பாய்.

உரிமையாளர்: தி. சிவகுமார்

# புத்தாண்டு வாழ்த்துக்கள்!

**அன்பான சாளரம் வாசகர்களே!**

உங்களுக்கு எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

சாளரம் முதலாவது இதழ் வெளியானது நேற்றுப்போல் நினைவிலுள்ளது. ஆனால், இருபத்திமூன்று இதழ்களை வெளியிட்டு மூன்றாம் ஆண்டு நிறைவை நோக்கி சாளரம் நடைபோட்டுக்கொண்டிருக்கிறது.

அச்சுத்தாள் தட்டுப்பாடு, அச்சகவசதியின்மை, விநியோகச்சிக்கல்கள் போன்ற தடைகளையெல்லாம் கடந்து, இன்று தமிழீழத்தில் அதிக எண்ணிக்கையில் பிரசுரமாகி அதிக வாசகர்களைக்கொண்ட ஓர் மாத சஞ்சிகையாக சாளரம் வளர்ச்சி கண்டுள்ளது.

இதற்கெல்லாம் முக்கியகாரணம் வாசகர்களாகிய நீங்கள் வழங்கிவரும் மேலான ஆதரவுதான். அதற்காக சாளரம் உங்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

முடிந்தவரை சாளரத்தை தரமான ஆக்கங்களுடனும், அழகான வடிவமைப்புடனும் உங்கள் கரங்களில் தவழவிட முயற்சி செய்வோம்.

சாளரம் இதழின் விலை சில சமயங்களில் அதன் ஆக்கச்செலவிற்கும் குறைவாகவே உள்ளது. இதனால் எமக்கு இலாபம் எதுவுமில்லை.

வாசகர்கள் சாளரத்தைக் கருத்துடன் படித்து பயன் பெறுவார்களாயின் அதுவே எமக்குக்கிடைக்கும் மிகப்பெரிய இலாபம் என எண்ணுகிறோம்.

மாணவர்களது ஆக்கங்களை ஒவ்வொரு இதழிலும் இருபக்கங்கள் பிரசுரிக்க முடிவெடுத்துள்ளோம்.

மாணவர்கள் தமது ஆக்கங்களை (கவிதைகள், துணுக்குகள், சிறுகட்டுரைகள்) சிறியதாக அனுப்பி வைத்தால், இருபக்கங்களில் அதிக மாணவர்களது ஆக்கங்கள் பிரசுரமாக வசதியாக இருக்கும். சிறு கதைகள் தனியான பக்கத்தில் பிரசுரமாகும். சிறுகதைகள் தாளின் ஒரு பக்கத்தில் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமல் அழகான கையெழுத்தில் அல்லது, தட்டச்சில் பொறித்து அனுப்பலாம்.

ஆக்கங்கள் யாவும் சமகாலப் பிரச்சினைகளைப் பற்றியதாக அமைதல் வேண்டும். அதேசமயம் சொந்த ஆக்கங்களாகவும் அமைதல் முக்கியம். ஆக்கங்களை மாணவர்கள் தங்களது ஆசிரியர்களிடம் காட்டி தரமானது என உறுதிசெய்து எமக்கு அனுப்பினால் உதவியாக இருக்கும். தரமான ஆக்கங்கள் நிச்சயம் அடுத்தடுத்து பிரசுரமாகும்.

சாளரம் வாசகர்களாகிய மாணவர்களையும், இளைஞர்களையும் மாதமொரு முறையாயினும் நேரில் சந்திக்கும் நிகழ்வுகளை நடாத்தவும் திட்டமிட்டு வருகிறோம். அதுபற்றிய விபரம் பின்னர் வெளியிடப்படும்.

மீண்டும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

– ஆசிரியர்

பூநாறி மரத்தடி
இணுவில்

சாளரம்
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

சாளரம் கதவு 3 (23) காற்றலை 6

## இந்த இதழில்..

☐ ஆசிரியர் தலையங்கம்

☐ சமூகவியல் ஓர் அறிமுகம்

☐ தெறிப்பு

☐ ஒலிம்பிக் போட்டிகள்

☐ யாழ்ப்பாணத்தில் அதிசய உலகம்

☐ பகலவன் பதில்கள்

☐ நீரிழிவை கட்டுப்படுத்தும் சிறு குருஞ்சா இலை

☐ பனைப் பரம்பலும் பயன்பாடும்

☐ ஆங்கிலம் கற்போம்

☐ தமிழ்மொழிப்பேணலும், மாணவர் பங்களிப்பும்

☐ பல்கலைக்கழக அனுமதியும், தரப்படுத்தலும் எமது இன்றைய நெருக்கடிகளும்

☐ அறிவுலகம்

☐ சிங்கள ஆட்சியில் அரியாசனம் ஏறமுனையும் ஆங்கிலமும் ஏற்படப்போகும் பாதிப்பும்

☐ அரும்புகள்

☐ பயன் தரு தகவல்கள்

☐ கேணல் கிட்டு அவர்கள் நினைவாக...

☐ பொது அறிவுப் போட்டி

# மாணவரும், அரசியலும், போராட்டமும்

'மாணவர்களுக்கு 'அரசியல்' தேவையில்லை அவர்கள் அரசியலில் தலையிடக்கூடாது. கற்றலில் மட்டுமே அவர்களின் கவனம் இருத்தல் வேண்டும்.'

இப்படிச் சிலர் கூறுவதை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். இந்த 'அறிவுரை' எந்தளவிற்கு சரியானது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

மனிதன் தான் வாழுகின்ற மண்ணில் சுதந்திரமான தனது இருப்பை உறுதிசெய்து கொள்ளல் முக்கியமானது. அந்தச் சுதந்திரம் எந்தவொரு கட்டத்திலேனும் தடைப்படும்போது - மறுக்கப்படுகின்றபோது அங்கு அரசியல் குறித்தசிந்தனை அனைவருக்கும் அவசியமாகின்றது.

எமக்கு ஏன் சுதந்திரம் மறுக்கப்படுகின்றது என்பது பற்றி சிந்திக்கும்போது, எம்மை ஆள்வதாகக்கூறும் அரசு பற்றியும் அதன் கொள்கைகள் பற்றியுமான சிந்தனைத் தேடல் ஒன்று எமக்குள் உருவாகிறது. அங்கே 'அரசியல்' பற்றிய தேவை உணரப்படுகின்றது.

தரப்படுத்தல் - வெட்டுப்புள்ளி இவை எல்லாம் தமிழ் மாணவர்கள்மீது ஏன் பிரயோகிக்கப்படுகின்றது?

இதைப்பற்றி சிந்திப்பதற்கும், அதற்கெதிராக ஆட்சேபிப்பதற்கும், போராடுவதற்கும் அரசியல்பற்றிய தெளிவு தேவைப்படுகின்றது.

சுதந்திரத்திற்காக போராட்டம் நிகழ்ந்துகொண்டிருக்கின்ற இம்மண்ணில் எமது வீடுகளிலும், வீதிகளிலும், பாடசாலைகளிலும், தொழில் நிலையங்களிலும்கூட எமது பாதுகாப்பு நிச்சயமற்றதாகி விட்டது. அந்தளவிற்கு எமக்கான சுதந்திரம் ஆளும் அரசாங்கத்தினால் கடுமையாக மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அரசியல்பற்றியும், போராட்டம் பற்றியும் அனைவரும் நன்கு விளங்கிக்கொள்ளல் அவசியம் வாய்ந்தது. மாணவர்களை புத்தகப்பூச்சிகளாக, யதார்த்தமான உலகப்பார்வையற்றவர்களாக முடக்கி வைக்கும் 'அறிவுரைகளை' மாணவர்கள் நிராகரித்தே ஆகவேண்டும்.

சொன்னதைத் திருப்பிச்சொல்லும் கிளிப்பிள்ளை போலவோ, ஒலிநாடா போலவோ, அவர்கள் இருக்கக்கூடாது. பாடப்புத்தகங்களை மனனம் செய்து பரீட்சைகளில் ஒப்புவித்து வெற்றி பெறுதலானது மனிதவாழ்வின் பூரண வெற்றியாகிவிடாது.

### எமக்கென்று ஒரு சுதந்திர நாடு

எமக்கென்று ஒரு சுதந்திர நாடு அமையும்போதுதான் ஒவ்வொரு தமிழனும் தலை நிமிர்ந்து வாழமுடியும். என்னால் வெளிநாடுகளில் வாழமுடியவில்லை. எனது சுபாவம் அப்படி. இப்போதுதான் புரிகிறது. நாம் எம் மக்களையும், மண்ணையும் எவ்வளவுதூரம் நேசிக்கின்றோம் என்பது. இன்னும் எத்தனை பிறவி எடுத்தாலும் எனது மக்களுக்கும் மண்ணுக்கும் சேவைசெய்யும் பேறு எனக்குக் கிடைக்கவேண்டும். நாம் எமது மண்ணில் ஒவ்வொரு அடி நிலத்துக்கும் போரிட்டவர்கள். ஒவ்வொரு வீட்டைப் பிடிப்பதற்கும் போரிட்டவர்கள் எப்படி எம் மண்ணைப் பிரிந்து வாழமுடியும்.

கேணல் கிட்டு அவர்கள்

# சமூகவியல் - ஓர் அறிமுகம்

## சமூகவியல் முறையியல்களும் முடிவுகளும்

சமூகவியல் முறையியல்களை எடுத்து நோக்குவோமானால், இரசாயனம், பௌதீக விஞ்ஞான ஆய்வுமுறைகளைப் போலன்று, இது மாறுபட்டதாகவே காணப்படும். சமூகவியலாளனின் ஆய்வுக்குரிய உபகரணங்கள் பெரும்பாலும் வினாக்கொத்து, கணிப்பான், ஒப்பீட்டுப் படிவம், (தற்போது) கணனி போன்றவையும் ஆகும். பீற்றர் பேர்ஜர் என்ற சமூகவியல் அறிஞர் கூறுவதுபோல் "நாளாந்தம் மனிதன் வாழ்கின்ற உலகமே அவனது ஆய்வுகூடம்" எனலாம். உதாரணமாக ஒரு அணுசக்தி விஞ்ஞானி அணுவிற்குள் புகுந்து வாழ்வதில்லை, மாறாக அவன் இவ்வுலகில் எல்லோரையும்போல் உடைதரித்து, உணவருந்தி, திருமணம் செய்தும் வாழ்கின்றான். இருந்தும் இவையல்ல அவனது ஆய்வுகூடம். ஆனால் ஒரு சமூகவியலாளன் சமூகத்தில்தான் வாழ்கின்றான். அவனது வாழ்வுகூட, அவன் ஆய்வுக்குட்படுத்தியிருக்கின்ற பொருளின் ஒரு பகுதியாகவும் இருக்கும்.

விஞ்ஞான ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட ஆய்வானது கீழ்க்காணும் படிமுறைகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

(அ) அவதானிப்பிலும் பொது அறிவிலும் உருவான ஒரு கருதுகோள் ஏற்படுத்தப்படும்.

(ஆ) இக்கருது கோளுக்குத் தொடர்புடைய புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்டு விமர்சனரீதியாக அவதானிக்கப்படும்.

(இ) ஆய்வுக்குட்படுத்தப்பட்ட விடயமும் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களும் முற்றிலும் பொருத்தப்பாடுடையனவாகக் காணுமிடத்து ஒரு பொதுவான முடிவு எடுக்கப்படும்.

(ஈ) ஒரு முறை எடுத்த தரவுகளின் அடிப்படையில் இறுதியான முடிவு எடுப்பது ஏற்புடையதன்று. எனவே அந்த "மாதிரி"யில் தரவுகள் சேகரிக்கப்பட்டு மீளாய்வுக்குட்படுத்தப்படும். தரவுகளில் வழுக்கள் இருப்பின் மூன்றாம் முறையும் அதே "மாதிரி"யில் தரவுகள் சேகரிக்கப்பட்டு ஒரு பொதுமையான கருத்து உருவாக்கப்படும்.

சமூகவியலிலே பல்வேறுபட்ட ஆய்வுமுறைகள் கையாளப்படுகின்றன; அவைகளில் ஒரு சிலவற்றை இங்கு பார்போம்.

### 1. கட்டுப்படுத்தப்பட்ட குழு ஆய்வுமுறை

இம்முறையானது, ஒரு குழுவினரை ஒரேமாதிரியான சூழலில் வைத்து ஆய்வினை மேற்கொள்வது. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் பொதுவான ஒரு அபிப்பிராயப்படி, "ஒரு படையணியில் கறுப்பர்களும் வெள்ளையர்களும் ஒன்றுசேர்ந்து இயங்குவது பல சிக்கல்களையும் காழ்ப்புணர்ச்சிகளையும் உருவாக்கும்" என்ற நிலை இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் காணப்பட்டது. இந்தக்கருதுகோளை ஆய்வுக்குட்படுத்த விரும்பிய சமூகவியலாளர்கள் மேற்கூறிய "கட்டுப்படுத்தப்பட்ட குழு ஆய்வு" முறையைக் கையாண்டனர். இதற்காக ஒரு குழுவில் கறுப்பர்களையும் வெள்ளையர்களையும் ஒருங்கிணைத்து இயங்க வைத்தார்கள். மற்றக் குழுவில் இரு இனத்தவர்களையும் வெவ்வேறாகப் பிரித்து இயங்கவைத்தார்கள். ஒரு குறிக்கப்பட்ட கால எல்லைக்குப்பின், போர்வீரர்களின் உளப்பாங்கினை அளவிட்டனர். இரு இனத்தவர்களையும் ஒன்று சேர்த்து வைக்கப்பட்ட அணியில் ஏழு சதவீதமானோரே காழ்ப்புணர்ச்சியுடன் காணப்பட்டனர். தனித்தனி இனங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த குழுக்களில் ஏறத்தாள 62% மானோர் காழ்ப்புணர்ச்சியுடன் காணப்பட்டனர். இது ஐக்கிய அமெரிக்காவில் இனம் தொடர்பான மனோபாவங்கள் இடைவினைகளால் மாற்றம் அடைவதை எடுத்துக்காட்டியது. ஆனால் இந்த ஆய்வானது சர்வதேச ரீதியாக நிறுவப்பட்ட முடிவல்ல, ஏனெனில் அமெரிக்காவில் அரசியல், சமூக, இனத்துவப்பின்னணிகளை மையமாக வைத்தே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

### 2. அவதானிப்பு முறை

இந்த முறைதான் மனிதன் தன் பரிணாம வளர்ச்சியில் பல முன்னேற்றப் பாதைகளைக் கடந்து வர உதவியது எனலாம். இந்த அவதானிப்பு முறை இருவகைப்படும். ஒன்று பங்குபற்றி அவதானித்தல், மற்றது பங்கு பற்றாமல் அவதானித்தல் எனப்படும்.

பங்குபற்றி அவதானிப்பது என்பது, ஆய்வுக்குட்படுத்தப்படும் விடயத்தோடு ஆய்வாளன் தன்னையும் ஒருவனாக்கிப் பங்குபற்றி அவதானித்தல். உதாரணமாக ஒரு குறிக்கப்பட்ட சமூக விரோத (போதைப்பொருள் கடத்தல்) குழுவைப் பற்றியும் அதன் செயல்முறைகள் பற்றியும் ஆராய முற்படுவர், அக்குழுவுடன் தன்னையும் ஒருங்கிணைத்துக்கொண்டு அக்குழுவைப்பற்றிய ஆய்வை மேற்கொள்ளுதல் ஆகும். இம்முறையில் ச[illegible] பாதகங்களும் உண்டு. ஒருசாரார் இம[illegible]

நேர்மை அற்றது என்பர். மற்றவர்கள் இம்முறையினால் இலகுவாக உள்ளார்ந்த விடயங்களை அறிந்துகொள்ள முடியுமென வாதிடுவர். சில சந்தர்ப்பங்களிலே ஆய்வாளன் தனது நோக்கத்தை மறந்து, நிகழ்வுடன் இரண்டறக்கலந்துவிடும் வாய்ப்புக்களும் உண்டு. இதனால் ஆய்வு பாதிக்கப்படுவதுமல்லாமல் ஆய்வாளனும் பாதிக்கப்படுகிறான். பங்குபற்றாத அவதானிப்பு முறையிலும், விடயத்தின் பல அம்சங்களுக்கான விளக்கங்கள் சீராக அறிந்துகொள்ள முடியாத காரணத்தினால் ஒரு பக்கச்சார்பான முடிவுகளை எடுப்பதற்கு வாய்ப்புக்களும் உண்டு.

### 3. சமூக அளவீட்டு முறை

இம்முறையைத்தான் பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கையாளுகின்றன. உதாரணமாக ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்குத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட 'ஐந்தாண்டுத்திட்டம்' எனக்கொண்டால், இத்திட்டத்தினால் மக்கள் அடைந்த பலாபலன்கள் என்ன என்ற கேள்விக்கு விடைகாண சமூக அளவீட்டுமுறையைக் கையாளுதல், அதன் பயனாக சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை இனங்காணமுடிகின்றது.

### 4. செவ்வி காணுதலும், வரலாற்று ஏடுகளை ஆராய்தலும்

ஒரு குறிக்கப்பட்ட விடயம் தொடர்பாக, அவ்விடயத்துடன் தொடர்புகொண்டு ஊடாடுவோரைச் செவ்விகண்டு, தரவுகளைச் சேகரித்து ஆய்வுக்குட்படுத்தலாகும். உதாரணமாக, பல்கலைகழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிச் சிக்கல்பற்றிய ஓர் ஆய்வினை மேற்கொள்ள உயர்கல்வி அமைச்சு அதிகாரிகளில் ஒருசிலரையும், உயர்கல்வி நிறுவனங்களில் ஒருசிலரையும், நாட்டின் பல பாகங்களிலும் இருந்து ஒரு குறிக்கப்பட்ட மாணவர்களையும், பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளோரில் ஒருசிலரையும் பேட்டிகண்டு, அத்தோடு இவ்விடயம் தொடர்பான சென்றகால வரலாற்றையும் ஒப்பிட்டு ஆராய்ந்து தொகுத்து நோக்கி ஒரு பொதுவான முடிவுக்கு வருதலாகும்.

### 5. விடய ஆய்வுமுறை

இம்முறை ஒரு குறிக்கப்பட்ட விடயத்தை மட்டும் ஆழமாகநோக்கி ஆய்வுக்குட்படுத்துதல் ஆகும். இங்கே ஆய்வுக்குட்படுத்தப்படும் குறிப்பிட்ட விடயத்தின்மீது செல்வாக்குச் செலுத்துகின்ற எல்லா அம்சங்களும் துருவி ஆராயப்படும்.

இவைபோன்று மேலும் சில முறையியல்கள் உண்டு. சமூகவியல் ஆய்விலே ஒரு குறிக்கப்பட்ட முறைதான் சரி என்று கூறுவதற்கில்லை. பல்வேறுபட்ட ஆய்வுமுறைகளை ஒருங்கிணைப்பதன்மூலம் ஆய்வைச் சீர்படுத்தலாம். ஒரு பிரச்சினையைப் பற்றி ஆராய முற்படும்போது, நாம் பல கோணங்களிலே நின்று நோக்கவேண்டும். ஏனெனில் ஒரு சமூகப்பிரச்சினையனாது பல்வேறு காரணிகளின் தொகுப்பே எனலாம்.

சமூகவியல் ஆய்விலே, ''நல்லது'' ''கெட்டது'' என்ற சொற்கள் உபயோகிக்கப்படுவதில்லை. சமூகவியல் ஆய்வாளன் ''இதைச் செய்யுங்கள்'' என்று கட்டளை தருவோனாக இருப்பதில்லை. சிக்கலான விடயங்களை இலகுவாக விளங்கிக் கொள்ளவும் தீர்வுகளைப் பரிந்துரைசெய்யவும் உதவுதல் சமூகவியலின் கடமையாகும். ஒரு திருடனைப்பார்த்துபலர் ''இவன் கேட்டவன்'' என்று கூற, ஒரு சமூகவியல் ஆய்வாளன், ''இவன் சமூக விழுமியங்களுக்கு முரண்பட்டவன்'' என்று கூறுவான். எனவே உணர்ச்சிவயப்படாது சமூக ஆய்வினை மேற்கொள்ளுதல், சமூக வாழ்க்கையைச் சீராக்க வழிவகுக்கும்.

''ஜீ'' — (2)

---

**ஒவிய வாக்கியப் பரிசுக் கவிதை நவம்பர், டிசெம்பர் 1993**

## புதுப்பாதை

இடிபாட்டினுள்ளும் இறுமாப்புடன்
எழுந்து நிற்கும் இனிய தமிழர் (நாம்)
இலத்திரனியல் இயலிசை
கமத்தொழில் கணிதத்தையும்
களங்கமின்றிக் கற்றுக்கொள்வோம்
தளிர்கள் - இங்கே
அடியோடு இடிந்தாலும்
அசைய மாட்டோமென
அண்ணார்ந்து நிற்கின்றன
பொசுங்கிய கல்வியை
புதுமுறையாய்க் கற்று
புதுப்பாதை சமைத்திடுவோம்.

ப. தயாளன்

---

**ஒவிய வாக்கியம்**

வாசகர்கள் இம்முறையும் சாளரம் அட்டைப்பட ஓவியத்திற்கே ஓவிய வாக்கியம் எழுதியனுப்புங்கள்.

## விடயங்கள் சிறப்பாக இருந்தன

● கடந்த நவம்பர் - டிசெம்பர் மாத இளையோர் திங்கள் இதழான சாளரத்தில் வெளியான அறிவுலகம், இலட்சிய வீரர் இறப்பதில்லை, பகலவன் பதில்கள், தமிழரின் போர்க்கலைகள், பயன் தரும் தகவல்கள், அதீத கற்பனை ஓவியம் போன்ற விடயங்கள் சிறப்பாக இருந்தன. சாளரம் மேலும் சிறப்புடன் அமைய என் வாழ்த்துக்கள்.

இ. இராமதாஸ் யா/ உடுத்துறை ம. வி. தாளையடி.

க. நகனேந்திரன்
பூநாறி மரத்தடி

## மனதில் பதியத்தக்க இதழ்

● தமிழீழ தேசமெங்கும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் மனங்களில் பதியத்தக்க திங்களிதழாக வெளிவரும் சாளரத்தை மனமார பாராட்டுகிறேன்.

கை. சூர்வேலன் திருநெல்வேலி.

## அறிவியல் உண்மைகளை அறிகிறோம்

● சாளரம் இதழ்மூலம் நாம் பல அறிவியல் உண்மைகளை அறியக்கூடியதாகவுள்ளது. எம்மைப் போன்ற மாணவர்களுக்கு இது ஒரு ஊக்கமாத்திரையாக அமைகிறது. இவ்விதழானது மேலும் மேலும் சிறப்புற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

மா. கலையரசி யாழ் / சித்திவிநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை.

## நல்ல கவிதை, சிறுகதை இல்லையே!

● கடந்த மாத சாளரம் கவர்ச்சியுடன் இருந்தது. உள்ளடக்கியிருந்த விடயங்கள் யாவும் பிரயோசனம் மிக்கவையாகவே இருந்தன. முன்னரைப்போல நல்ல கவிதை, சிறுகதை, போன்ற அம்சங்கள் இல்லாமை ஒரு குறையாகவே உள்ளது. தயவுசெய்து இதனைக் கவனத்தில் எடுக்கவும்.

அ. அன்பழகன் கிளிநொச்சி.

## பனை குறித்து எழுதவும்

● சாளரம் கடந்த சில இதழ்களில் எமது மண்ணின் தேசிய வளமான பனை குறித்து சில கட்டுரைகளை வெளியிட்டன தொடர்ந்தும், ஒவ்வொரு இதழிலும் பிரசுரிக்காவிடினும் அவ்வப்போது பனை, தென்னை பற்றிய விடயங்களை மறக்காமல் சேர்த்துக்கொள்ளவும்.

ம. கணேசமூர்த்தி கொடிகாமம்.

# அலெக்ஸிவிச் யூரி ககாரின் (A. YURY GAGARIN)



விண்வெளியில் முதன்முதலிற் பயணஞ்செய்தவரும், சோவியத் யூனியனின்விண்வெளிவீரருமான இவர் 1934 மார்ச் 09-ல் பிறந்தவராவர். 1951-ல் பட்டதாரியானார். தொடர்ந்தும் தொழிற்துறைக்கல்வியைக் கற்றுக்கொண்டிருந்தபோதே விமானமோட்டவும் கற்று வந்தார். இதன்பின்னர் சோவியத் விமானப்படையில் ஒரு பயிற்றுனராகச் சேர்ந்து 1957-ல் அதனிலும் சித்தி பெற்றார்.

வொஸ்ரொக் (Vostok) என்ற நான்கேமுக்கால் தொன் எடை கொண்ட விண்வெளிக்கலம் 1961 ஏப்ரல் 12-ம் நாள் யூரி ககாரினை இயக்குனராகக் கொண்டு முற்பகல் சரியாக ஒன்பது மணி ஏழு நிமிடத்திற்கு வான்நோக்கி ஏவப்பட்டது. மொஸ்கோவிலிருந்து ஏவப்பட்ட இக்கலம் ஆகக்கூடியது 187 மைல்கள் உயரத்திற் பூமியைச் சரியாக ஒரு மணித்தியாலம் இருபத்தொன்பது நிமிடத்திற் சுற்றிவிட்டு மீண்டும் சோவியத் யூனியனில் மு. ப. 10.55 க்கு வந்திறங்கியது.

இதனைத்தொடர்ந்து இவருக்கு உலகரீதியான பிரபலம் ஏற்பட்டது. சோவியத் யூனியனின் அதியுயர்ந்த கௌரவங்கள் வழங்கப்பட்டன. இதன் பின்னர் இவர் சுப்ரீம் சோவியத் (Suprem Soviet) என்னும் மிகவுயர்ந்த அதிகார பீடத்தின் இரண்டாந்தரப்பதவியையும் பெற்றார். இதன் பின்னரும் இவர் வேறு விண்வெளிவீரர்களைப் பயிற்றுவிப்பதில் ஈடுபட்டிருந்தார். 1968-ல் இவரும் இன்னும்மொரு விமானியும் இரண்டு ஆசனங்களைமட்டுங்கொண்ட ஜெட்விமானத்தில் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் அது விபத்துக்குள்ளாகி அகாலமரணமானார்கள். இவரின் நினைவாக இவரின் பெயர் ஷட்ஸ்க் (Gzhatsk) என்னும் நகருக்குச் சூட்டப்பட்டது.

# ஒலிம்பிக் விளையாட்டுக்கள்




ஒலிம்பிக் விளையாட்டு எல்லா விளையாட்டுப் போட்டிகளையும் விடப் பழமை வாய்ந்ததும் உண்மையிலேயே மிகவும் சர்வ தேசத் தன்மையுடையது மாகும். தேசங்களுக்கிடையில் நல்லெண்ணத்தை மேம்படுத்தற் பொருட்டு விளையாட்டுக்கள் நடைபெறும் இடத்திற்கு அருகில் அமைக்கப்படும் ஒலிம்பிக் கிராமத்தில் விளையாட்டு வீரர்கள் வசிப்பதுடன் தோழமை உணர்வுடன் நெருங்கிப் பழகுவர். கிரேக்க மொழியில் 'ஒலிம்பியாட்' என்பது நான்காண்டுகள் என்னும் கருத்துடையது. பெரிய மேசிடோனியாவின் எல்லையில் அமைந்த ஒலிம்பஸ் மலை விளையாட்டுக்களுக்கான இடமாகத் தெரிவுசெய்யப்பட்டது. முதலாவது நவீன ஒலிம்பிக் விளையாட்டு 1896 இல் நடைபெற்ற உடற்பயிற்சி விளையாட்டாகும். 1896 இல் 12 நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 1936 இல் அது 40 ஆக அதிகரித்தது. இவற்றுடன் ஓட்டம், குத்துச்சண்டை, வாட்சண்டை (Fenciny), சைக்கிள் ஓட்டம், மல்யுத்தம், நீர்ப்போலோ, தசைகளை வலுப்படுத்தும் உடற்பயிற்சிகள், வளைகோற் பந்தாட்டம், உதைபந்தாட்டம், சிறு கைத்துப்பாக்கி, சுழற்துப்பாக்கி சுடுதல், பாரம் தூக்கல் என்பவற்றிலும் போட்டிகள் நடைபெற்றன. பெண்கள் முதன் முதலாக நவீன ஒலிம்பிக்கில் 1912 இல் தோன்றினர். 1928 இல் விசேட தடகள நிகழ்ச்சியில் பங்குபற்றினர். முதலாவதற்குப் 10 ஆகவும், இரண்டாவதற்கு 5 ஆகவும், மூன்றாவதற்கு நான்காகவும், 3, 2, 1 இற்கு முறையே 4 வது, 5 வது, 6 வதும் ஆகும்.

ஒலிம்பிக் விளையாட்டுக்களில் 100 மீட்டர் தொடக்கம் 10,000 மீட்டர் வரை தனித்தட நிகழ்ச்சிகளும் அடங்கியுள்ளன ஆண்கள், பெண்கள் இருபாலார்க்கும் 100 மீ, 200 மீ, 400 மீ 800 மீ, 1500 மீ நிகழ்ச்சிகள் உள்ளன.

ஆண்களின் நிகழ்ச்சிகள், 5000 மீ, 10,000 மீ, ஆகும். நான்கு ஒலிம்பிக் அஞ்சல் நிகழ்ச்சிகள் உள்ளன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரிய 4×100 மீ. ஆண்களுக்கும் பெண்களுக்கும் 4×400 மீ.

தடை தாவல்கள் — 100 மீட்டரில் பெண்கள்
110 மீட்டர் ஓட்டம்
400 மீட்டர் ஓட்டம்
இடர்பல கடக்கும் குதிரையோட்டப் பந்தயம்—
000 மீட்டரில்
தி ஓட்டப் பந்தயம் (ஆண்கள்)

20 கிலோ மீற்றர் நடத்தல் ஆண்கள்.

எறியும் நிகழ்ச்சிகள்:- ஈட்டியெறிதல், குண்டெறிதல், தட்டெறிதல், சம்மட்டியெறிதல் (ஆண்கள்)

பாய்தல் நிகழ்ச்சிகள்:- உயரம் பாய்தல் நீண்ட தூரம் பாய்தல், தடி ஊன்றிப்பாய்தல் (POLEVAULT) (ஆண்கள்) தத்தி மிதித்துப்பாய்தல் (TRIPLE JUMP) (ஆண்கள்)

இணைந்த நிகழ்ச்சிகள் :- டிக்கத்திலன் பென்தலன்

ஒலிம்பிக் இடர் கடக்கும் குதிரைப் பந்தயம் ஆண்களுக்கான 3000 மீட்டருக்கு மேற்பட்ட நிகழ்ச்சியாகும். இது 28 தடைதாவல்களையும் ஏழு நீர்ப்பாய்தல்களையும் கொண்டுள்ளது.

மரதன் 42.119 கி. மீ. அல்லது 26 மைல் 385 யார் நீளத்தைக் கொண்டுள்ளது.

டிகத்திலன் 10 நிகழ்ச்சிகளையே கொண்ட ஆண்களுக்கான போட்டியாகும்.

முதலாம் நாள்
அ. 100 மீ.
ஆ. நீண்ட தூரம் பாய்தல்.
இ. குண்டெறிதல்
உயரம்
ஈ. உயரம் பாய்தல்
உ. 400 மீ.

இரண்டாம் நாள்
ஊ. 110 மீ. தடைதாவல்கள்
எ. கனத்த திகிரி வட்டம் (டிஸ்கஸ்)
ஏ. தடி ஊன்றிப்பாய்தல் (Pole Vault)
ஐ. எறிவேல்
ஒ 1500 மீ.

பென்ரத்லன் ஐந்து நிகழ்ச்சிகளைக்கொண்ட பெண்களுக்கான போட்டியாகும்.

முதலாம் நாள்
அ. 100 மீ. தடைதாண்டல்
ஆ. குண்டெறிதல்
இ. உயரம் பாய்தல்

இரண்டாம் நாள்
ஈ. நீளம் பாய்தல்
உ. 200 மீ.

குறித்த நேரத்துள் செய்தல், உயரங்கள், தூரங்கள் என்பனவற்றுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

உளக்குறைபாடுடைய சிறியோரையும் முதியோரையும் பயிற்சியளித்து விளையாட்டு வீரர்களாகப் போட்டியிடக்கூடியவாறு விசேட ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நடாத்தப்படுகின்றன. பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சொற்றொக்கா மண்டிவில்லாரில் ஆண்டுதோறும் அல்

லது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நடைபெறுவதற்கு முன்னரோ பின்னரோ ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நடைபெறுகின்றன.

நவீன பென்ரத்லன் சவாரிசெய்தல், சுடுதல், வாட்சண்டை (Fencing), நீச்சல், மைதானத் தூடாக ஓடுதல் (Cross Country Running, Contest) என்பவற்றைக் கொண்ட ஒலிம்பிக் நிகழ்ச்சியாகும்.

விளையாட்டுக் குழு மூவரைக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளின் ஒழுங்கு பின்வருமாறு:-

சவாரிசெய்தல்,

வாட்சண்டை, சுடுதல்,

நீந்துதல், மைதானத்தூடாக ஓடுதல்,

ஒலிம்பிக் சாமர்த்தியம்

குளோஸ்விற் உயிருடன் வாழ்ந்து கொண்டிருப்பாரானால் (மற்றைய முறைகள் மூலம்) அரசியல் விரிவாக்கத்திற்கு ஒலிம்பிக்கே காரணம் எனவும் போர் அல்லவெனவும் கூற அவரைத் தூண்டலாம். 1896 நவீன உருவில் எதென்சில் பழைய நிலைக்குக் கொண்டு வந்ததிலிருந்து ஒலிம்பிக் விளையாட்டுக்கள் அரசியலில் சர்ச்சைகளினால் குழப்ப நிலைக்குட்பட்டது. 1936 இல் ஹிட்லரின் பேர்லினில் நடைபெற்ற விளையாட்டுக்கள்.

1936 பேர்லின்

கறுப்பு அமெரிக்கரான ஸ்பிறின்ரர் ஜெஸ்சி ஓவன் நான்கு தங்கப்பதக்கங்களைப் பெற்றமை ஆரியரது மேம்பட்ட தன்மைபற்றிய நாசிகளின் கோட்பாடுகளைக் ஹிட்லரினால் வெளிப்படுத்த செய்த முயற்சியினை வெகுவாகக் குறைத்தது.

1948 இலண்டன்

பொதுவுடைமை நாடுகள் கலந்து கொண்ட முதல் விளையாட்டுக்கள் அயர்லாந்தைச் சேர்ந்த இரண்டு நீச்சல் வீரர்கள் அயர்லாந்திற்காக போட்டியிடுதவற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

1952 கெல்சிங்கி

சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம் முதல் முறையாகப் போட்டியிட்டது. சீனா, தாய்வான், ஆகிய இரு நாடுகளும் அங்கீகாரம் குறித்து சர்வதேச அமைப்புக் குழுவுடன் நீண்ட கலந்துரையாடல் நடாத்திய பின்னர் கலந்து கொள்வதற்கு மறுத்தன.

1956 மெல்போர்ன்

சுயஸ்கால்வாய் மீது பிரித்தானிய, பிரான்சிய, இஸ்ரவேலிய நாடுகளின் ஆக்கிரமிப்பால். எகிப்து, ஈராக், லெபனான் என்பன ஒலிம்பிக்போட்டியை பகிஷ்கரித்தன. அதேபோல் ஹங்கேரி மீது சோவியத்தின் ஆக்கிரமிப்பால் ஒல்லாந்தும், ஸ்பெயினும் பகிஷ்கரித்தன.

1960 உரோமாபுரி

தென்னாபிரிக்கா 1992 வரைக் கடைசியாகப் பங்கு பற்றுவதற்கு இவ் விளையாட்டுக்களிலேயே அது மதிக்கப்பட்டது. இன ஒதுக்கலுக்கெதிரான சர்வதேச எதிர்ப்புக்களினால் அனுமதி மறுக்கப்பட்டது.

1964 டோக்கியோ

1952 இல் ஆசிய விளையாட்டுக்களில் இஸ்ரவேல், தாய்வான் ஆகியவை பங்கு கொண்டதனால் ஏற்பட்ட முந்திய சர்ச்சை காரணமாக இந்தோனேசியாவும் தென்கொரியாவும் பங்குபற்றுவதிலிருந்து விலகிக் கொண்டன.

1968 மெக்சிக்கோ நகரம்

பத்து நாட்களுக்கு முன்னர் அரசாங்கக் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்த மாணவர்கள் மீது படையினர் சுட்டனர். இரண்டு அமெரிக்கர்கள் பதக்கம் வழங்கும் விழாக்களின் போது கறுப்பர் அதிகார பூர்வ மரியாதையைச் செலுத்தினர்.

1972 மியுனிச்

இஸ்ரவேலின் பணயக் கைதிகளைப் பிடிக்கும் பொருட்டு ஒலிம்பிக் கிராமத்தின் மீது எட்டுப் பலஸ்தீனியர்கள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலினால் பதினொரு இஸ்ரவேலிய விளையாட்டு வீரர்களும் ஐந்து பலஸ்தீனத் தீவிரவாதிகளும் இறந்தனர்.

1976 மொன்றியல்

அவ்வாண்டில் தென்னாபிரிக்காவிற்கு நியூசிலாந்தின் உதைபந்தாட்ட அணி விஜயம் செய்துவிட்டு ஒலிம்பிக்கில் கலந்து கொண்டமைக்காக அபிரிக்க நாடுகள் ஈராக், கயானா என்பன எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்குடன் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளவில்லை.

1980 மொஸ்கோ

1979 டிசெம்பரில் ஆப்கானிஸ்தான் மீது சோவியத் யூனியன் படையெடுத்ததை எதிர்க்கும் முகமாக மேற்கு ஜேர்மன், யப்பான் ஆகிய நாடுகள் உட்பட 62 நாடுகள் ஐ. நா அரசுகளின் தலைமையில பகிஸ்கரிப்பை மேற்கொண்டன.

1984 லொஸ் எஞ்சலீஸ்

நன்மை பயக்கும் முறையில் விளையாட்டுக்கள் நடைபெற்றன. சோவியத்யூனியன் கலந்து கொள்ளவில்லை.

1988 சியோல்

தென்கொரியா சர்வாதிகாரம் குறித்த கவலைகளுக்கு விட்டுக்கொடுத்து சுதந்திரமான தேர்தலை நடாத்தச் சம்மதித்தது.

1992 பார்சிலோனா


யூகோஸ்லாவியா மீது ஐ. நா. தடைகளை விதித்ததன் பின்னர் தனிப்பட்ட விளையாட்டு வீரர்கள் மட்டும் கலந்துகொள்ளலாமென சர்வதேச அமைப்புக் குழு தெரிவிக்கின்றது. தென்னாபிரிக்கா அதன் முதலாவது பல்லின அணியை அனுப்புகின்றது.

1996 அட்லாண்டா (அமெரிக்கா)

26 வது ஒலிம்பிக்போட்டிகள் அமெரிக்கா அட்லாண்டா நகரில் நடைபெறவுள்ளது.

## 2000 சிட்னி

2000-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெறப் போவதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த செப்ரெம்பர் மாதம் 23-ம் திகதி அனைத்துலக ஒலிம்பிக் கமிட்டியின் 91 உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இம் முடிவு எடுக்கப்பட்டது. இப்போட்டியும் 21-ம் நூற்றாண்டின் முதல் போட்டிஎன்பதால் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.



# யாழ்ப்பாணத்தில் 'அதிசய உலகம்'

தி. தவபாலன்

அதிசய உலகம்... சகல வசதிகளும் தடுக்கப்பட்ட நிலையில் டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் 4-ம் திகதி வரை யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு "அதிசய உலகத்தை" யாழ். குடாநாட்டு மக்கள் தரிசித்தார்கள்.

இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கி உலகம் பயணிக்கும் வேளையில் - காலத்தின் கோலமாக துலாமிதித்தலும், ஆக்கிவாயுவுமாக காலத்தை ஓட்டும் எமக்கு அது ஒரு "அதிசய உலகம்" தான். என்றோ! ஒரு நாள் உலகம் எமக்காக திறந்து விடப்படும். அன்று உலகத்தைப் பார்த்து நாம் மிரளப்போகிறோம். தற்காலத்தை கற்கால மனிதன் பார்த்து எப்படி வியப்பானோ அப்படி நாமும் வியக்கத்தான் போகிறோம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக் கணனிக்கிளையின் ஆதரவில் யாழ். பல்கலைக்கழக கணனிப் பிரிவினரும் - யாழ். கணனிக் கல்வி நிலையங்களும் இணைந்து கணனி இலத்திரனியல் கண்காட்சியை 4 நாட்கள் நடத்தின.

எதிர்காலத்தினை நாம் எதிர்கொள்ளும்போது உலகின் வளர்ச்சியைச் சமாளிக்க இது ஒரு அடிப்படை அம்சம்.

கணனியின் அமைப்பு (Hardware) உட்பட கணனி நிகழ்ச்சித்திட்டங்கள் வரை இக் கண்காட்சியில் விளக்கப்பட்டன.

இன்றைய நிலையில் நமது உற்பத்தி, பொருளாதாரம் ஆகியவற்றை கணனியில் பேணுதல், ...ழ் திட்டமிடல் என்பவை விளக்கப்பட்டன. ... உலகில் கணனியினால் செய்யப்படும் உருப் ... (Scanner) முறை, இசை அமைப்பு முறைமைகள், கணனியின்மூலம் விளையாடுதல் என்பன எமக்கு தெரியவந்தன.

இன்று தேவையான கணித செயன்முறைகள் வர்த்தக செயற்பாடுகள், அபிவிருத்தி வழிமுறைத் திட்டமிடல்கள் இங்கே விளக்கப்பட்டன.

இக் கண்காட்சியில் ஒன்றை எல்லோரும் புரிந்து கொள்ளமுடிந்தது. அது மனித வலுச் செயற்பாட்டை கணனி பெருமளவில் குறைக்கும் என்பதுதான்.

கண்காட்சியில் கண்ட சில விடயங்கள்...

- ☐ கணனியில் அமைக்கப்பட்ட புரட்சி கானங்கள்.
- ☐ விடுதலைப் புலிகளின் இலட்சினைத் தோற்றம்.
- ☐ தமிழீழ வளங்களின் நிரற்படுத்தல்.
- ☐ ஒரு மின்சார புகையிரதச் செயற்பாட்டை கட்டுப்படுத்தல்.
- ☐ பேசும் கணனி, கணனி விளையாட்டுகள் இன்னும் பல விடயங்கள்.

இந்த உலகத்தைப் பார்த்தபொழுது ஒரு ஏக்கம் எம்மைத் தொடுகின்றது. இந்த உலகத்தில் எப்போது நாம் நுழையப்போகிறோம்.

"கணனி என்பது பெரிதாக ஒன்றுமில்லை. அது ஒரு இயந்திரம் - அதற்குத் தெரிந்தது இயந்திர மொழி. நமது மொழிகள் எதுவும் அதற்குப் புரியாது. கணனியுடன் பேச அதன் மொழி நமக்குத் தெரிந்திருக்கவேண்டும். கணனியின் கல்வி என்பது அதன் மொழியைப் படிப்பதுதான்".

இந்த உலகத்தினுள் புகுந்து வெளியேறிய போது நாம் புரிந்துகொண்டது இதுதான்.

தேவராசா முகுந்தன்,
கொழும்புத்துறை.

கே: பிறநாடுகளில் வாழ்ந்து கொண்டு இலக்கியம் படைக்கும் ஈழத்துப் படைப்பாளிகளில் குறிப்பிட்டுக் கூறத்தக்கோர் யாவர்? இவர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப. ஈழத்தில் படைப்பாளிகளாக இருந்த குறிப்பிடத்தக்க எழுத்தாளர்கள் வெளிநாடுகளில் வாழ்கின்றார்கள். அவர்களில் சிலர் படைப்பிலக்கியத்திலும், ஏனைய இலக்கிய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் இலக்கியம் 'புலம் பெயர்ந்தோர் இலக்கியம்' என அழைக்கப்படுகின்றது. அங்கிருந்து கொண்டு தமிழீழப் போராட்டம் குறித்தும், மக்களது சமகாலப் பிரச்சினைகள் குறித்தும், எந்தளவு உண்மைத் தன்மையோடும், ஆழத்தோடும் எழுதமுடியும் என்றொரு கேள்வி எழுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகவுள்ளது. வெளிநாடுகளில் சென்று இலக்கியம் படைக்கும் இந்த ஈழத்துப் படைப்பாளிகள் சொந்தமண்ணை விட்டு அங்கு செல்வதற்கு என்னகாரணம்? அங்கிருந்து கொண்டு சொந்த மண்ணில் தாம் கொண்டுள்ள நேசம் காரணமாக ஆத்ம சுத்தியோடுதான் இவர்கள் இலக்கியம் படைக்கிறார்களா? அல்லது சொந்த பிரபல்யத்திற்காக இதனைச் செய்கிறார்களா? இவ்வாறான கேள்விகளுக்கெல்லாம் பதில் கண்டு பிடிப்பது கடினமானதாகவுள்ளது. அதனால் எவரையும் என்னால் பெயர் குறிப்பிட்டுக் கூறமுடியாமலுள்ளது.




சி. சசிதரன்,
யா/ஆழியவளை,
சி. சி. த. க. வித்தியாலயம்.

கே: எதிர் காலத்தில் இலங்கை முழுவதும் தமிழர் கையில் வந்தால் இந்தநாடு எப்படி இருக்கும்? (ஒரு கற்பனையில் எழுந்த கேள்வியையே கேட்கிறேன்.)

ப: உங்களுக்கு ஏன் இப்படி ஒரு கற்பனைதோன்றவேண்டும். தமிழர் தாயகமான தமிழீழம் அமைந்து சுதந்திரமாக வாழும் வாழ்க்கை எப்படி இருக்கும் என கற்பனை செய்யுங்களேன். எப்போதும் யதார்த்தமாக கற்பனை செய்யுங்கள், அந்த கற்பனைக்கு உருவம் கொடுப்பதைக்குறித்து சிந்தியுங்கள். பின் செயற்பாட்டில் இறங்குங்கள். இதுதான் இப்போது தேவை.

யோ. சதீஸ்,
ஆழியவளை மேற்கு.

கே: விமானத்தைக் கண்டவுடன் மக்கள் ஓடுகின்றார்களே இது ஏன்?

ப: இது என்ன கேள்வி? குண்டு போடும் விமானங்களைக் கண்டதும் பயத்தினாலும், தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் தான் மக்கள் ஓடுகிறார்கள். சிலர் இந்த மண்ணைவிட்டே ஓடுகிறார்களே! அவர்கள் தான் கேள்விக்குரியவர்கள்.

கு. கணேசமூர்த்தி,
நல்லூர்.

கே: இலக்கிய நிகழ்வுகளுக்கோ, வெளியீட்டு விழாக்களுக்கோ சென்றால் சில பேச்சாளர்கள் நேரத்தைப் பற்றியே கவலைப்படாமல் பேச்சினை இழுத்துக் கொண்டு போகிறார்கள். அண்மைக்காலத்தில் இது மிகவும் அதிகரித்துள்ளது. இதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது? நிகழ்ச்சிகளுக்குப் போகும் பழக்கத்தையே நிறுத்தி விடலாமா?

ப: இது ஒரு தர்மசங்கடமான நிலைதான். இந்த நிகழ்வுகளுக்குச் செல்வதன் மூலம் ஒன்று - அந்நிகழ்வை, நிகழ்வோடு சம்பந்தப்பட்டவரை நாம் கௌரவிக்கிறோம். இரண்டாவது - சில பேச்சுக்களின்போது உபயோகமான விடயங்கள் பலவற்றை உள்வாங்கிக்கொள்கிறோம். இப்பழக்கத்தை முற்றாகநிறுத்திவிடுவது நல்லது என்று நான் சொல்லமாட்டேன். பேச்சாளர்கள் தயவுசெய்து இதனைப் புரிந்துகொண்டால் பிரச்சினைதீரும். ஒரு நிகழ்வுக்கு நான் சென்றிருந்தேன், பேச்சாளர் ஒருவர் நீண்ட நேரம் பேசினார். இடையிடையே 'உளவியல்' பற்றியெல்லாம் விளக்கமளித்தார். தான் 'உளவியல்' தெரிந்த ஒருவர்என்பதையும் காட்டிக் கொண்டார். சபையில் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் தாங்கமுடியாமல் நெளிந்தார்கள், கொட்டாவி விட்டார்கள். தங்களுக்குள் 'கமுச' வென்று கதைத்து கொண்டார்கள். பின் மெல்ல மெல்ல ஒவ்வொ வராக மண்டபத்தை

வெளியேறவும் தொடங்கினார்கள். பேச்சாளர்பேச்சை நிறுத்தவே இல்லை. சபையோரின் 'உளநெருக்கடியை' புரிந்து கொள்ளாத அவரின் உளவியல் கருத்துக்களை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

ம. காந்தரூபன்,
மானிப்பாய்.

கே: ஒரு இளைஞனைப்பார்த்து ஒரு யுவதி, அல்லது ஒருயுவதியைப்பார்த்து இளைஞன் அடிக்கடி சிரித்தால் அதனை 'காதல்' என்று முடிவெடுக்கலாமா?

ப: சிரிப்பை எல்லாம் காதல் என்று முடிவுகட்டி விட்டீர்களானால் காதல் என்பது சிரிப்புக்கிடமான ஒன்றாகவே முடிந்துவிடும். கவனம்!


S. சித்திரா,
கோவில்வீதி, யாழ்ப்பாணம்.


கே: பெண்கள் ஆண்களை விட உடற்பலத்தில் சற்றுக் குறைவாகவே இருக்கின்றனர். பெண்கள் பொதுவாகவே ஆண்களை விட பலம், நிறை என்பன குறைவானவர்கள் எனவும் கருதப்படுகின்றனர். இதற்குக் காரணம் பெண்களின் இயற்கையான உடலமைப்பா அல்லது, காலாகாலமாக பெண்கள்மீது பிரயோகிக்கப்படும் ஒடுக்குமுறைகளா?

ப: ஆண்களுக்கும் பெண்களுக்கும் உடலளவில் வேறுபாடுகள் இருப்பினும், ஆண்களைக்காட்டிலும் பெண்களுக்குத்தான் மனவலிமையும் பொறுமையும் மிக அதிகமாகவுள்ளன என்பதை இன்று பல்வேறு ஆய்வுகள் நிரூபித்துள்ளன. மனவலிமை இல்லாத உடல்வலிமை பிரயோசனம் இல்லாதது. எனவே எதனையும் சாதிக்கக்கூடிய மனவலிமை பெண்களுக்கு உள்ளது.

நவீன உலகில் எல்லாத்துறைகளிலும் பெண்கள் இன்று முன்னேறி வருகின்றனர். அவர்களின் முழுத்திறமையும் வெளிப்படாமல் போனதற்கு காலங்காலமாக பெண்கள்மீது பிரயோகிக்கப்பட்டு வந்த ஒடுக்குமுறைகள், பிற்போக்கான சமூக கட்டுப்பாடுகள் என்பனதான் காரணம்.

## ஒளிரும் கப்பல் (LIGHT SHIP)





ஒளிரும் கப்பல்களுக்குப் பதிலாகத் தற்போது பயன்படுத்தப்படும் மிதவைகள்.

கலங்கரை விளக்கமொன்றினை நிர்மாணிப்பதற்குச் சாத்தியமற்ற சூழ்நிலையில் துறைமுகக்கடற்பரப்பில் போக்குவரத்துச் செய்யும், அப்பரப்பிற்குள் நிலையாக நின்றும் ஒளிரும் கப்பலே இதுவாகும். நோர் (Nore) எனப்படும் முதலாவது ஒளிரும் கப்பல் 1732 ல் தேம்ஸ் நதியின் கழிமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. இன்றைய ஒளிரும் கப்பல்கள் சிறியனவும், உருக்கினாலானவைகளுமாகும். அத்துடன் மூடுபனிக்காலத்தில் வழிகாட்டும் சமிஞ்ஞைகள், வானொலி சாதனங்கள் ஆகியவற்றைக் கொண்டவையாகவும் உள்ளன. மேலும், கடல் கொந்தளிப்பாகவுள்ள வேளைகளிற் கடற் போக்குவரத்திற்கான சமிஞ்ஞை ஒளிக்கதிர்களைக் (Light Beam) கிடை நிலையாக வீசுவதற்கு உதவும் சாதனங்களையும் கொண்டுள்ளன. இக்கப்பல்களின் பெயர்கள் பகல் நேரங்களிற் தெளிவாகத் தெரியும் விதத்தில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கும்.

இவ்வகை ஒளிரும் கப்பலின் பாவனையிலுள்ள பாதக நிலையென்னவென்றால் இதற்காகும் செலவு அதிகமாயிருப்பதும் பனிக்கட்டியும் புயலும் நிறைந்த சூழலில் இதனை ஓரிடத்தில் நங்கூரமிட்டு வைத்திருப்பதில் ஏற்படும் கஷ்டமுமாகும். இப்போது ஒளிரும் கப்பல்களுக்குப்பதிலாகக் கோபுரங்களும், மிதவைகளும் (BUOY) பயன்படுகின்றன. கலங்கரை விளக்கும் நிர்மாணிப்பது சாத்தியமற்ற இடங்களில் இக்கோபுரங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

# நீரிழிவைக் கட்டுப்படுத்தும் 'சிறுகுருஞ்சா' இலை

ஆங்கிலத்தில் 'Diabetes' என்று அழைக்கப்படும் நீரிழிவு நோயானது மனித சமுதாயத்திற்கு ஒரு புதிய நோய் அல்ல. நாலாயிரம் ஆண்டுகளுக்குமுன்பே இது மனிதர்களிடம் காணப்பட்டதாக கருதப்படுகின்றது. சிந்துவெளிநாகரீக காலப்பகுதியிலேயே நீரிழிவு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நீரிழிவை நோய் என்று குறிப்பிடுவதுகூட பொருத்தமானதல்ல. அது ஒரு குறைபாடு. ஆங்கிலத்தில் அதனை 'Sugar Complaint' என்று குறிப்பிடுகின்றனரேதவிர 'Sugar Disease' என்றுயாரும் குறிப்பிடுவதில்லை. இதனை முற்றாக குணப்படுத்த இன்னும் சிகிச்சை முறை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் கட்டுப்பாடாக வைத்திருக்கலாம். கட்டுப்பாடான உணவுவகை மூலமும், மருந்துகள் மூலமும் நீரிழிவைக்கட்டுப்படுத்தலாம் நீரிழிவை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதானது நீரிழிவு இல்லாத நிலைக்குச்சமன் என்று கூடக் கூறலாம். ஆனால், இதனைக் கட்டுப்படுத்தாமல் விடும்போது இது உடலின் பல பகுதிகளைத்தாக்கி மனிதனை முழு நோயாளியாக்கிவிடும். கொழுப்புச்சத்துள்ள உணவுப் பொருட்களையும், இனிப்பு வகைகளையும் தவிர்க்கவேண்டும். மது அருந்தும் பழக்கமுள்ளவர்கள் அதனை அடியோடு கைவிடவேண்டும். மருத்துவரின் ஆலோசனைப்படி நடந்து கொள்ள வேண்டும்.

சித்த வைத்தியத்தில் நீரிழிவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க பல மூலிகைகள் சொல்லப்படுகின்றன. அதில் 'சிறுகுருஞ்சா' இலை குறிப்பிடத்தக்க நிவாரணத்தை அளிப்பதாக தற்போதைய மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 'சிறுகுருஞ்சா' தமிழீழ பிரதேசங்களில் பொதுவாக வளரக்கூடிய கொடியினமாகும். இதன் இலையும், வேரும் மருத்துவக்குணம் கொண்டவை.

ஆயுர்வேத வைத்தியமுறையில் இந்த 'சிறுகுருஞ்சா' இலையை சிறந்த சிறுநீர் பெருக்கியாகவும் வயிற்றுப் பொருமலை நீக்கி பசியைத் தூண்டுவதற்காகவும் பயன்படுத்துகின்றனர்.

'சிறுகுறிஞ்சா' இலையைப் பொடிசெய்து கரும்புச்சாற்றுடன் வைத்திருக்க அக் கரும்புச்சாறு 18 மணி நேரத்தில் இனிப்புத்தன்மையை இழந்துவிடும் இதனைமிருகங்களுக்குக் கொடுத்துப் பரிசோதனை செய்து பார்த்ததில் அவையினதுகுருதியில் இருந்த குளுக்கோஸ் குறைந்து விடுவதை காணக்கூடியதாக இருந்தது. இந்த இலையானது நேரடியாக இரத்தத்திலுள்ள இனிப்புத்தன்மையைக் குறைப்பதுடன் 'பங்கிரியாஸ்' என்னும் சுரப்பியினைத் தூண்டி இன்சுலினையும் அதிகமாகச் சுரக்கப் பண்ணலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நாட்டுப்புற வைத்தியர்கள் நாளொன்றுக்கு பத்து 'சிறுகுருஞ்சா' இலைகளைத் தின்று வந்தால் நீரிழிவு குணமாகும் என்று சொல்கிறார்கள். நிழலில் உலர்த்திப் பொடிசெய்யப்பட்ட 'சிறுகுருஞ்சா' இலையை தினமும் 2 கிராம் முதல் 4 கிராம் வரை சாப்பிட்டுவந்தால் இரத்தத்திலுள்ள குளுக்கோஸ் நிச்சயமாக குறைக்கப்படுகின்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நீரிழிவு உள்ளவர்கள் ஒரு நல்ல மருத்துவரின் ஆலோசனையுடன் 'சிறுகுருஞ்சா' இலையினைப் பயன்படுத்தி இந்நோயை கட்டுப்படுத்தி நிவாரணம் பெறலாம்.

## செய்தியில் ஒரு சேதி

இரண்டாம் உலகப்போரின்போது 1944 ஜூன் 5ம் நாள், இரவு 9.15 பி. பி. சி. யின் செய்தி ஒலிபரப்புச் சற்றுநேரம் இடைநிறுத்தப்பட்டு பின்வரும் அறிவித்தல் ஒலிபரப்பாகியது. 'ஐலீனும் ஜோவும் திருமணம் செய்துகொண்டனர். சுவெஸ்ஸில் வெப்பமாகவுள்ளது ..... திசையறிகருவி வடக்கைநோக்கிய படியுள்ளது.... பகடைக்காய்கள் மேடைமீது உள்ளன' (Fileen is married to Jo... It is hot in Suez .. The Compass points North . The dice are on the Table) அநேக ஜேர்மனியர் உட்படப் பல்லாயிரக்கணக்கான நேயர்களுக்கு இச்செய்தி ஒரு குதர்க்கமாகவிருந்திருக்கும். ஆனால் இது தலைமறைவாயிருந்த பிரஞ்சு மக்களுக்கு வெற்றி நாள் அண்மித்துவிட்டதென்ற அர்த்தத்தில் வெளியான மறைமுகச் செய்தியாகும். இதன் விளைவாக எதிர்ப்பியக்கத்தைச்சேர்ந்த 5000 ற்கு மேற்பட்ட பிரஞ்சிய தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் இரு கைகளிலும் TNT கொண்ட இரு பொதிகளைக் கொண்டுசென்று இரவோடிரவாகக் கேந்திர ரயிற்பாதைகளை உடைத்தெறிந்தனர். மேலும் 74 தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையங்களை அழித்ததுடன் ஜேர்மனியரது மேலதிகபடைகள் செல்லவிருந்த தெருக்களையும் தகர்த்தெறிந்தனர்.

# பனைப் பரம்பலும் பயன்பாடும்

பாமே குடும்பத்தைச் சேர்ந்த மரங்களான தென்னை, கமுகு போன்ற ஒருவித்திலைத் தாவரங்களுள் ஒன்றுதான் பனைமரமாகும். பனை மரம் பொறாசியஸ் பிளேபெலிபர் என்னும் தாவரவியற் பெயரைக் கொண்டதாகும்.

பூமியில் சமகோட்டிற்கு அண்மையில் உள்ள வெப்ப வலயப் பிரதேசங்களிலேயே பனைப்பயிர் வளர்ந்துள்ளது. குறிப்பாக மேற்கு ஆபிரிக்கா, தெற்காசியா, தென்கிழக்காசிய நாடுகளில் இது வளர்ந்துள்ளது. மேற்கு ஆபிரிக்க நாடுகளான செனகல், மாலி, ஆகிய இடங்களில் சுமார் ஐந்து கோடி பனை மரங்கள் காணப்படுகின்றன. இந்தோனேசியாவில் சுமார் ஒருகோடி எண்ணிக்கை உடைய பனைகள் உண்டு. தாய்லாந்தில் இருபது இலட்சம் பனைகள் உண்டு. இந்தியாவில் பலகோடி பனை மரங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. இருந்தபோதும் தமிழ்நாட்டில் மட்டும் நான்கு கோடிக்கும் அதிகமான பனைமரங்கள் இருப்பதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் ஒரு கோடியே பத்து இலட்சம் பனைகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இவற்றில் 99 வீதமானவை தமிழீழத்திலும் மிகுதி ஒரு வீதமானவை அம்பாந்தோட்டை, புத்தளம் போன்ற பிரதேசங்களிலும் வளர்கின்றன. தமிழீழத்தில் இருக்கக்கூடிய பனைகளுள் பெரும்பாலான தொகை மரங்கள் யாழ் குடாநாட்டிலேயே உள்ளன.

இந்தியநாடு வருடமொன்றுக்கு சுமார் பத்தாயிரம் மெற்றிக் தொன் பனந்தும்பு உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன்மூலம் பத்துக்கோடி இந்திய ரூபா பெறுமதியான அந்நியச் செலவாணியைச் சம்பாதிக்கின்றது. இதைத்தவிர இந்தியாவில் உள்ளூர்தேவைகளுக்காக பனை ஓலையில் இருந்தும், பனை நாரில் இருந்தும் கைப்பணிப் பொருட்கள் உற்பத்தி செய்கின்றார்கள். பதநீர் உற்பத்தி செய்து பானமாகவும், பனைவெல்லமாகவும், கல்லாக்காரமாகவும் பாவிக்கின்றார்கள்.

ஏனைய நாடுகளில் குறிப்பாக இந்தோனேசியா தாய்லாந்து, மலேசியா, போன்ற நாடுகளில் பனை ஓலைக் கைப்பணிப் பொருட்களும் பதநீரில் இருந்து பனங்கட்டியுமே உள்ளூர்த்தேவைகளுக்காக சிறிய அளவில் செய்கின்றார்கள்.

ஆனால் இலங்கையில், பனை வளத்தில் இருந்து பலவித பயன்பாடுகளைப் பெறுகின்றார்கள். உலகில் பனைவளம் வியாபித்துள்ள அனைத்து நாடுகளுள் இலங்கையில் மட்டுமே குறிப்பாக தமிழீழத்தில மட்டுமே பனைவளத்திலிருந்து இயன்ற வரை அதிக பயன்பாடுகள் பெறப்படுகின்றன.

பலநூறு பயன்பாடுகளை வழங்கக்கூடிய பல் மூலஉபகாரியான பனைவளத்தில் இருந்து தற்போது பதநீர், பனைவெல்லம், கல்லாக்காரம், பனஞ்சீனி, மதுசாரம் போன்ற சாற்றுற்பத்திப் பொருட்களும். பனாட்டு, கோடியல், ஜாம், மென்பானங்கள், பழச்சாறு கலந்த பண்டங்கள, போன்ற பனம்பழ உற்பத்திப் பொருட்களும், பனங்கிழங்கு, ஒடியல், புழுக்கொடியல் போன்ற கிழங்கு உணவுப் பொருட்களும் பனைஓலை, மட்டை நார், தும்பு, ஈர்க்கு போன்ற பொருட்களிலிருந்து கைப்பணிப் பொருட்களும்,

இவற்றைவிட மரம், ஊமல் போன்ற பொருட்களும் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

தமிழீழத்தில் சுமார் 7500 பேருக்கு அதிகமானவர்கள் பனைவளத் தொழிலை நேரடியாக மேற்கொண்டுள்ளனர். இவர்களில் தங்கிவாழ்வோரையும் சேர்த்துக் கணக்கிட்டால் பல்லாயிரம் பேர் பனைவளத்தை நம்பி வாழ்கின்றார்கள்.

இது ஒரு தேசிய மூலவளமாகவும் இதனை அண்டி வாழ்வோரின் தொகை பெருமளவில் இருப்பதாலும் இத்துறை சார்ந்த தொழிலையும், வளத்தையும் அபிவிருத்திசெய்ய வேண்டியது தேசியக் கடமையாக அமைகின்றது.

த. மதுபாலசிங்கம்
கல்வியங்காடு

# குரலை அடையாளம் காணல் (VOICE IDENTIFICATION)

ஒவ்வொரு மனிதனது குரலும் தனித்தன்மையானது. அதுபோன்றே ஒலியை சொல்லை உச்சரிப்பதும் தனித்தன்மையாகவுள்ளது. மனிதருக்குள் இவ்வாறு காணப்படும் வேறுபாட்டைக் கொண்டு பொலிசார் குற்றம் புரிந்தவனைக் கண்டறிய முற்படுகின்றனர். இம் முயற்சியில் பொலிசார் கையாளும் நுட்பமானது, ஒருவர் சொற்களை உச்சரிக்கும்போது வெளிவரும் ஒலி அலைகளி அதிர்வு, ஃன் நெருக்கம் (Intensity) மற்றும் அவை எடுக்கும் நேரம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதாகும். இவ்வலைகளை ஒருவிளக்க வரைபு (Graph) ஆகப்பதிவதற்கு ஒலிப்பதிவுக் கருவியைப் (Sound Spectro Graph) பயன்படுத்துகின்றனர். இவ்வாறு பதிவாகிய வரைவுகளை ஒன்றுடன் ஒன்றை ஒப்பிட்டு வேறாக்கிக் கொள்கின்றனர். இந்தக் குரல் ஒலிவரைவுகளை (அல்லது குரல் ஒலிப்பதிவுகளை) நீதிமன்ற விசாரணையின்போது சாட்சியமாகப் பயன்படுத்திவருகின்ற போதிலும் ஆட்களை அடையாளங் காண்பதில் இந்நுட்பத்தின் துல்லியம்பற்றி (சரியான தன்மை) சொல், உச்சரிப்பு ஒலிகளை ஆராயும் விஞ்ஞானிகள் மத்தியில் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்து வருகிறது.

க. நாகேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# ஆங்கிலம் மொழி கற்போம்

# LANGUAGE LEARN ENGLISH

## SCENE - EDUCATION CENTRE

## ENGLISH

## LESSON - TWO

*We trust that you might have learnt with interest, the first lesson in English appeared in our last issue. In the same breath, we are commencing the second lesson · We earnestly welcome your comments regarding our English Lessons please.*

## இடம் - கல்வி நிலையம்

## ஆங்கிலம்

## பாடம் - இரண்டு

*எமது சென்ற இதழில் வெளிவந்த முதலாவது பாடத்தினை ஆர்வத்துடன் கற்றிருப்பீர்கள் என நம்புகின்றோம். அதேபோன்று இந்தப் பாடத்தையும் தொடங்குகின்றோம். ''ஆங்கிலம் கற்போம்'' தொடர் பாக உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம்.*

| | | | | |
|---|---|---|---|---|
| **Teacher:-** | "Good afternoon, Students." | — | ஆசிரியை:- | ''மதிய வணக்கம், மாணவர்களே'' |
| **Students:-** | "Good afternoon, Madam." | — | மாணவர்கள்:- | ''மதிய வணக்கம், அம்மணி'' |
| **Teacher:-** | "In the morning Kumar told you all about himself." | — | ஆசிரியை:- | ''காலையில் குமார் உங்களுக்குத் தன்னைப்பற்றி எல்லாம் கூறினார்.'' |
| **Students:-** | "Yes, Madam." | — | மாணவர்கள்:- | ''ஆம் அம்மணி'' |
| **Teacher:-** | "Now, Senthuran will speak about his friend." | — | ஆசிரியை:- | ''இப்பொழுது செந்தூரன் தனது நண்பனைப்பற்றிக் கூறுவார்.'' |
| | (Senthuran stands in front of his class) | | | (செந்தூரன் தன் வகுப்பு முன் எழுந்து நிற்கின்றார்) |
| **Senthuran:-** | "Friends! I am going to tell you about my best friend. | — | செந்தூரன்:- | ''நண்பர்களே! நான் எனது நெருங்கிய நண்பனைப்பற்றி உங்களுக்குக் கூறப்போகின்றேன். |
| | My best friend's name is Mohan. | | | எனது உற்ற நண்பனின் பெயர் மோகன். |
| | We are studying in the same class. | | | நாங்கள் இருவரும் ஒரே வகுப்பில் படிக்கின்றோம். |
| | Earlier, Mohan was living at Tellippalai in Jaffna. | | | மோகன் முன்பு யாழ்ப்பாணத்தின் உள்ள தெல்லிப்பளையில் வசித்தவர். |
| | His house was bombed in an aerial attack. | | | அவரின் வீடு ஆகாயத் தாக்குதலுக்கு உள்ளானது. |
| | He is now living at Kokuvil. | | | அவர் இப்பொழுது கொக்குவில் வசிக்கின்றார். |
| | His father was killed in that aerial attack. | | | அந்த ஆகாயத்தாக்குதலில் அவ தந்தை கொல்லப்பட்டார். |
| | Mohan's mother is doing business in the market. | | | மோகனது தாயார் சந்தையில் பாரம் செய்கிறார். |

| | |
|---|---|
| Mohan has a sister and a brother. | மோகனுக்கு ஒரு சகோதரியும் ஒரு சகோதரனும் உண்டு. |
| His sister is studying at Vembady Girls, High School, Jaffna. | அவரது சகோதரி யா/வேம்படி மகளிர் உயர் கல்லூரியில் படிக்கின்றார். |
| His family is poor. | அவரது குடும்பம் வறியது. |
| Mohan comes to school with me on my bicycle. | மோகன் என்னுடன் எனது துவிச் சக்கரவண்டியில் பாடசாலைக்கு வருவார். |
| His brother lost his leg in a shelling incident. | அவரது சகோதரன் ஒரு எறிகணைத்தாக்குதல் சம்பவத்தில் ஒரு காலை இழந்தார். |
| Mohan is pleasant to deal with. | மோகன் பழகுவதக்கு இனிமையானவர். |
| Mohan's father is a patriot. | மோகனின் தந்தையார் ஒரு நாட்டுப் பற்று உடையவர். |
| We go to the library everyday. | நாங்கள் ஒவ்வொருநாளும் வாசிகசாலைக்குச் செல்வோம். |
| Mohan wins the first prize in contests. | மோகன் போட்டிகளில் முதலாவது பரிசைப் பெறுவார். |
| He is very clever. | அவர் மிகவும் புத்திசாலி. |
| He knows well about our country. | அவருக்கு எமது நாட்டைப்பற்றி நன்கு தெரியும். |

**Teacher:-** "Well, Please sit down. We will meet at 4 p. m. tomorrow." — **ஆசிரியை:-** "நல்லது. தயவுசெய்து உட்காரவும். நாங்கள் நாளை 4 மணிக்குச் சந்திப்போம்."

**Students:-** "Thank you, Madam." — **மாணவர்கள்:-** "நன்றி அம்மணி"

# MEMORIZE A FEW WORDS

**Teacher:-** "Students, by memorizing and understanding the words. found in this lesson, we can build up our word - power. Please memorize the following words."

## சில சொற்களைப் பாடமாக்குங்கள்

**ஆசிரியை:-** "மாணவர்களே! சொற்களைப் பாடமாக்குவதாலும், விளங்கிக்கொள்ளுவதாலும் நாங்கள் எங்கள் சொல்லாட்சியை அதிகரிக்கலாம். தயவுசெய்து பின்வரும் சொற்களைப் பாடமாக்குங்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | Thanks — | நன்றி | 12. | Business — | வியாபாரம் | 23. | Market — | சந்தை |
| 2. | Today — | இன்று | 13. | Ourselves — | நாங்களே | 24. | Himself — | அவரே |
| 3. | Good — | நல்ல | 14. | Tell — | சொல் | 25. | Shelling — | எறிகணைத் தாக்குதல் |
| 4. | Stand — | நில் | 15. | Front — | முன்பகுதி | 26. | Incident — | சம்பவம் |
| 5. | Friend — | நண்பன் | 16. | Myself — | நானே | 27. | Poor — | வறிய |
| 6. | Silence — | அமைதி | 17. | Year — | வருடம் | 28. | Pleasant — | இனிமையான |
| 7. | Clock — | மணி | 18. | Grade — | தரம் | 29. | Contests — | போட்டிகள் |
| 8. | Radio — | வானொலி | 19. | Begin — | தொடங்கு | 30. | Country — | நாடு |
| 9. | Best — | திறமான | 20. | Same — | அதே | 31. | Family — | குடும்பம் |
| 10. | House — | வீடு | 21. | Aerial — | ஆகாய | 32. | Prize — | பரிசு |
| . | Attack — | தாக்குதல் | 22. | Kill — | கொல் | 33. | Patriot — | நாட்டுப்பற்று உடையவர் |

"Students we will meet again in the next class."

"மாணவர்களே நாங்கள் அடுத்தவகுப்பில் சந்திப்போம்."

## ENGLISH - LESSON - I CORRECTION

In our Issue of the "SALARAM" November / December, 1993 we have inadvertently omitted a few sentences. They are appended below. The error is very much regretted.

## ஆங்கிலம் பாடம் - I திருத்தம்

எமது நவம்பர் / டிசம்பர் 1993 சாளரம் இதழில் பின்வரும் வசனங்கள் சில விடுபட்டுள்ளன; இத்தவறுக்குப் பெரிதும் வருந்துகிறோம்.

| | | |
|---|---|---|
| I am Fourteen years old. | — | எனது வயது பதினான்கு. |
| He is a clerk | — | அவர் ஒரு எழுதுவினைஞர். |
| I study at Jaffna Hindu College. | — | நான் யாழ் இந்துக் கல்லூரியில் படிக்கிறேன். |
| I am studying in grade Eight. | — | நான் எட்டாம் வகுப்பில் படிக்கின்றேன். |
| At 8 O'clock I listen to the Radio News. | — | எட்டுமணிக்கு நான் வானொலிச் செய்தி கேட்பேன். |

## செய்தி நிறுவனம் (NEWS AGENCY)

ஒரு செய்தி நிறுவனமானது பரவலானமுறையில் ஒரு நாட்டிலிருந்து மட்டுமன்றி முழு உலகிலுமிருந்தே செய்திகளைச் சேகரித்து, அவற்றைப் பதிவுவைத்து, பின்னர் அவற்றை வேண்டி நிற்கும் பல்வேறு பகுதியினருக்கும் விநியோகிக்கின்றது. பல்வேறு செய்தித்தாள்கள், வானொலி நிலையங்கள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி நிலையங்கள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் பிற அமைப்புக்களுக்கும் இவ்வாறு செய்திகள் வழங்கப்படுகின்றன. ஆனால் செய்தி நிறுவனமொன்று செய்திகளைப் பிரசுரிப்பதில்லை. பொதுசனத் தொடர்புச்சாதனங்கள் தாமே செய்திகளைச் சேகரிப்பது கட்டுப்படியாகாதென்பதால் இத்தகைய செய்தி நிறுவனங்களுக்கு ஏற்படும் செலவில் ஒரு பங்கினைத் தாமும் கொடுத்துச் செய்திகளைப் பெற்றுக்கொள்கின்றன. எவரிலும் தங்கிநிற்காமல் தாமே செய்திகளைத் திரட்டிக்கொள்ளக்கூடிய ஆற்றல்மிக்க பொதுசனத் தொடர்புச் சாதனங்கள்கூட இத்தகைய செய்தி நிறுவனங்களில் தங்கி நிற்கின்றன.

செய்தி நிறுவனங்கள் பல்வேறுவகையான கட்டமைப்புகளுடன் இயங்குகின்றன. நகர, தேசிய மற்றும் உலகளாவியரீதியில் இவை செயற்படுகின்றன. காவல்துறை, நீதிமன்றம், அரச திணைக்களங்கள், பங்குச்சந்தை நிலைவரங்கள், விளையாட்டுத்துறை, தேர்தல் பெறுபேறுகள் போன்ற பல்வேறுபட்ட துறைகளிலும் செய்திகளைச் சேகரிக்கின்றன. இன்று இத்துறையில் வளர்ச்சியானது, செய்திகளைச் சேகரித்தலும் பரிமாறுவதும் என்ற கட்டத்தைத் தாண்டி அவற்றை வியாக்கியானப்படுத்துதல், சிறப்புக் கட்டுரைகள் தயாரித்தல், செய்திக்கான நிழற்படங்கள் எடுத்தல், வானொலி ஒலிபரப்புக்கேற்ற ஒலிப்பதிவு நாடாக்கள், ஒளிப்பதிவு நாடாக்கள் தயாரித்தல்வரை விரிந்து சென்றுள்ளன.

இந் நிறுவனங்கள் பெருந்தொகைப் பணச் செலவில் செய்தித் தொடர்புச் சாதனங்களை அமைத்துள்ளன. இதன்மூலம் ஒரு நிறுவனம் உதாரணமாக "த அசோசியேற்ரெட் பிறெஸ்" (The Associated Press) என்னும் நிறுவனம் ஒரு செய்தியை ஒரு நிமிடத்திலேயே உலகிலுள்ள எண்பது நாடுகளுக்கு அனுப்பிவைக்கும் திறனுடன் செயற்படுகின்றது.

உலகின் மிக உன்னதமான செய்தி நிறுவனங்கள் சில பின்வருமாறு, ஏஜென்சி பிரான்சி - பிறெஸ் (Agence France Press - A. F. P) க்யோடோ (Kyodo), பிறஸ் ட்றஸ்ற் ஒப் இன்டியா (Press Trust of India - P. T. I) றொய்ரர் Reuters ராஸ் (Tass) யுனைற்ரெட் பிறெஸ் இன்ரநஷனல் (United Prees International - U. N. I.) ஆகியனவாகும்.

## ஒற்றைக்காலில் உயரப்பாயும் வீரர் (One Legged High Jumper)

கனேடிய நாட்டவராகிய ஆர்னிபோல்ட் (ARNIE BOLDT) தனது ஒரு காலை இழந்த நிலையிலும் 1981-ம் ஆண்டு ஏப்ரல் 30-ம் திகதி ரோமாபுரியில் நடைபெற்ற உயரம் பாய்தல் நிகழ்ச்சியில் 6 அடி 8½ அங்குலம் பாய்ந்து சாதனை புரிந்தார். அவர் அங்கவீனம் ஒரு பிரச்சனை இல்லை என்பதனை எடுத்துக்காட்டினார்.




# தமிழ்மொழிப் பேணலும் மாணவர் பங்களிப்பும்

## 1 மாணவர் கல்விநிலை

மாணவர் உலகம் நாளைய சமூகத்தின் வளர்ச்சிக்கும் கட்டுக்கோப்பிற்கும் இன்றியமையாத ஒரு தனி உலகமாகும். எந்த நாட்டிலும் மாணவர் நலன்கள் சரியாகக் கவனிக்கப்படாவிட்டால் அங்கு எதிர்காலத்தில் பல சிக்கல்கள் ஏற்படும். பாடசாலையிலே கல்வி பயிலும்போது ஒரு மாணவன் தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றிய ஒரு இலக்கைப் பெறுகின்றான். குழந்தை நிலையிலிருந்து வளர்ச்சிபெற்று பள்ளிக்குச் செல்லும்போது அக்குழந்தையின் மனநிலையிலே தன்னைப்பற்றிய ஒரு மதிப்பீடும் தோன்றுகின்றது. பெற்றோரின் அன்பினாலும் அரவணைப்பினாலும் வளர்ந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டுப் புதியதொரு சூழலிலே குழந்தை சிலமணி நேரம் வளரத் தொடங்குகிறது. இவ்வேளையில் குழந்தையின் உடலும் உள்ளமும் வேகமான வளர்ச்சியை அடைகின்றது. பெற்றோருக்குப் பதிலாக ஆசிரியர்களது மேற்பார்வையிலும் கண்காணிப்பிலும் பாடசாலையில் குழந்தையின் பொழுது கரைகின்றது. இந்நிலையானது அக்குழந்தை வளர்ந்து பெரியவனாகி சமூகத்திலே தனி மனிதனாக மாறும்வரை நீடிக்கின்றது. ஏறக்குறைய 25 வயதுவரை கல்வி பயிலும் காலமாக குழந்தையின் வளர்ச்சியும் தொடர்கிறது.

எனவே இந்த வளர்ச்சிநிலையில் ஏற்படும் சிக்கல்களைப்பற்றியும் அவற்றைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகள் பற்றியும் சமூகத்தவர் அனைவரும் எண்ணிச் செயற்பட வேண்டியதும் அவசியமாகும். இன்று கல்வி நிலைபற்றிப் பல்வேறு நிலைகளில் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டிற்குரிய வசதிகளுக்கும் வாய்ப்புக்களுக்கும் ஏற்ப கல்விநிலையும் மாறுபட்டுள்ளது. மாணவர் கல்விநிலை உயரவேண்டிப் பல நாடுகள் பல ஆய்வுகளை நடத்தி பலகருத்துக்களை ...ும் நடைமுறைகளையும் வெளிப்படுத்தியுள்ளன. ...வற்றை வேறுசில நாடுகள் முன்னுதாரணங் ...கவும் கொண்டு மாணவர் உலகத்தை வழி ...த்திச் செல்கின்றன.

இன்று மாணவர் உலகம் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றது. குறிப்பாக எதிர்கால இலக்கு ஒன்றினைத் தெரிவதில் இன்றைய எமது மாணவர் பெரிதும் அல்லற்படுகின்றனர். கல்வியின் நோக்கம் எது என்பதனைச் சரியாகவிளங்கிக்கொள்ள முடியாமலுள்ளனர். இதற்கு வகுக்கப்பட்டுள்ள கல்வித்திட்டங்களும் ஓரளவு காரணமாக இருக்கின்றன. குறிப்பாகத் தமிழ் மாணவர்கள் எதிர்காலம் இத்தகைய திட்டங்களால் பெரிதும் பாதிப்படைய வழிவகுக்கப்பட்டுள்ளது. இன்றைய தமிழ் மாணவர்களின் தாய்மொழியான தமிழ்மொழிமூலம் கல்வி கற்பதை மாணவர் ஒருதரக்குறைவான விடயம் என எண்ணத் தலைப்பட்டுவிட்டனர். எமது தமிழ்மொழியின் வளமும் முன்னைய சிறப்பும் மாணவர்களால் அறியப்படாத பொருளாக உள்ளன. மொழி சார்ந்த உயர்கல்வியை இன்றைய மாணவர்கள் தொடரவும் விரும்புவது இல்லை. விஞ்ஞானக் கல்வியை மதிக்கும் அதேவேளையில் தாய்மொழி சார்ந்த உயர்கல்வியின் தரத்தை அவர்கள் குறைவாக மதிப்பிடுகின்றநிலையும் ஏற்பட்டுள்ளது. இந்நிலை வளருமாயின் தமிழ்மொழியின் ஆற்றல்பற்றிய மதிப்பீடுகளும், கணிப்புகளும் குறைவுநிலையில் செய்யப்பட வாய்ப்பு ஏற்படும்.

மாணவர்களின் எதிர்கால நலனையும் தமிழர் சமூகநலனையும் கருத்திற்கொண்டு நாம் கல்வியைத் திட்டமிடவேண்டிய காலம் வந்துவிட்டது. இதற்கெனப் பிறநாடுகளின் கல்விசார்ந்த திட்டங்களையும் நடைமுறைகளையும்பற்றி நாம் அறிந்து கொண்டு செயற்பட வேண்டும். எமது நாட்டில் மாணவர்களின் நலன்பற்றி நோக்குமிடத்து அவற்றைப் பொருத்தமாயின் நாமும் பின்பற்றுவது தவறன்று. ஏனெனில் மரபு நிலையான நமது தமிழ்மொழிக் கல்வியிலும் காலத்திற்கேற்ற மாற்றங்கள் பல கொண்டுவரப்படவேண்டியுள்ளன. மொழியின் நிலை, மாணவர்நிலை, நாட்டுநிலை என்னும் மூன்று கோடுகளையும் இணைத்து செம்மையான முக்கோணநிலையில் நின்று செயற்படின் எமது மாணவர் கல்வியும் நலனும் நின்று நிலைக்கும்.

## 2. மாணவர் கல்வி நிலையில் மொழியின் பங்கு

எமது நாட்டில் மாணவர் கல்விநிலையில் தாய் மொழியின் பங்கு குறைவுபட்டுள்ளது. தாய்மொழி மூலம் கல்வி பயின்றால் நல்ல வேலைவாய்ப்புக்கள் கிடைக்காது என்றும், உயர் கல்வியைப் பெறுவது எளிதல்ல என்றும் மாணவர்கள் எண்ணுகின்றனர். பிறமொழியான ஆங்கில மொழி மூலம் கல்வி பயின்றால் இவை யாவும் எளிதாகும் என நம்பி வாழ்கின்றனர். அந்த மாணவர்களின் எண்ணத் திற்குப் பெற்றோரும் ஆசிரியர்களும் காரணமாக இருப்பதுடன் சிறிலங்காவின் கல்வித் திட்டங்களும் காரணமாக இருக்கின்றன. குறிப்பாக அறிவியல் சார்பான கல்வியைக் கற்பதற்கு ஆங்கில மொழி மூலமாக இருப்பது நல்லது என்ற எண்ணமும் இதற்கு இன்னொரு காரணமாகும். பல நாடு களில் அந்தந்த நாட்டு மொழிகளிலேயே அறி வியல் சார்ந்த கல்வி நடைபெறுகின்றது என்பதை எமது நாட்டவர் இன்னமும் அறியாமல் இருப்ப தும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலைத்தேச நாடு களில் ஆங்கிலம் அல்லாது வேறு மொழிகள் தாய் மொழியாகப் பேசப்படுகின்ற நாடுகளில் அந்தந்த நாட்டு மொழிகளிலே சகல துறைசார் கல்வியும் நடைபெறுகின்றது. தமது நாட்டு மொழியிலேயே தமது கல்வி நடைபெறவேண்டும் என்ற தேசிய உணர்வு அங்கு இருப்பதே இதற்குக் காரணமாகும். பிறநாட்டு விடயங்களை அறிந்துகொள்வதற்கு அவர்கள் ஆங்கிலத்தை உலகப் பொது மொழியாக அது இருப்பதனால் கற்கின்றனர். ஆங்கில மொழி அங்கு இரண்டாந்தர நிலையிலேயே வளர்கின் றது. அதனால் அந்த நாட்டு மொழிகளின் மதிப்பு குறைவுபடாமல் உள்ளது. ஆனால் இங்கே இந் நிலை வேறுபட்டுள்ளது. அந்நியராதிக்கத்திற்கு உட்பட்டிருந்த போது ஆங்கிலமொழி கல்வி மொழி யாக்கப்பட்டது. ஆனால் அம்மொழியே தமிழ் மொழியைவிட வலுவும் வளமும் பெற்றமொழி என்ற நிலை இன்று உருவாகிவிட்டது. மொழி பெயர்ப்பு, பிறமொழிப்பயிற்சி என்பன மக்கள் மத்தியிலே அறியப்பட்ட விடயங்களாக இருப்பினும் தமிழ்மொழி மூலம் அவற்றை எல்லோரும்அறியும் வாய்ப்பு ஏற்படவில்லை. நேரடியாக ஆங்கிலமொழி மூலம் அறிவுசார் கல்வியைப் பெறுவதே நல்லது என்றும், சிறப்பு என்றும் தாய்மொழியான தமிழ் மொழி மூலம் அவற்றைப் பெறுவது மதிப்புக்குறை வான செயல் என்றும் பலர் எண்ணி வாழ்கின்ற னர். இந்நிலை மாறவேண்டும்.

உயர்கல்வி நிறுவனப் பணியாளர்களும் பல் கலைக்கழகப் பணியாளர்களும்கூட இவ்வாறே எண்ணிச் செயற்பட்டும் வருகின்றனர். தமது பணி மனை தொடர்பான ஆவணங்களையும் ஆங்கிலத் திலேயே பதிவுசெய்து வைக்கின்றனர். எமது நாடு, பண்பாடு, மொழி, இலக்கியம் போன்ற விடயங் களையும் ஆங்கில மொழியிலேயே பிறருக்கு உணர்த் துவது அவசியம் என்று எண்ணிச் செயலாற்றுகின் றனர். இத்தகைய சமூகநிலைப்பாட்டினால் மாண வர் உலகமும் தாய்மொழி மூலமான கல்வியைப் புறக்கணிக்க ஏதுவாகின்றது. இன்று எமதுநாட்டிலே பல மாணவர்கள் தமது மொழி ஆற்றலை இழந் திருப்பதற்கும் இதுவே முக்கிய காரணமாகும்.

எம்மைப்பற்றிய விடயங்களை எமது மொழி யிலே முதலில் ஆவணப்படுத்த வேண்டும். சிறப் பாக பண்பாடுபற்றிய செய்திகளையும் நடைமுறை களையும் தமிழ்மொழியிலேயே ஆவணப்படுத்தி வைக்கவேண்டும். உலகிலே தோன்றிய சில மொழி கள் இன்று பேச்சுவழக்கும் எழுத்து வழக்கும் அற்று மறையும்நிலையில் உள்ளன. இவைபோன்ற நிலை தமிழ் மொழிக்கு ஏற்படாது பாதுகாக்க வேண்டி யது தமிழரது தலையாய கடமையாகும். மாணவர் களின் பங்களிப்பு இதற்குப் பெரிதும் வேண்டப் படுவதொன்று. எதிர்காலத்தில் தமிழ்மொழிமூலம் அவர்கள் எல்லாவற்றையும் செய்யக்கூடிய ஆற்றல் பெற்றவர்களாக வளரவேண்டும். ஆரம்பக் கல்வி நிலை தொடக்கம் உயர்நிலைக் கல்விவரை தமிழ் மொழியிலேயே தமது கல்வியைத் தொடர்கின்ற வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். அறிவியல்துறைசார் கல்விநெறி பயிலும் மாணவர் களும்கூட தமிழ்மொழியில் தமது நாளாந்த தேவை களை நிறைவாக்கக்கூடிய ஆற்றல் பெறவேண்டும். இல்லாவிடில் நாளாந்த வாழ்க்கை நிலையிலே தமிழ் மொழியின் தேவை இல்லாமற்போய்விடும். இதனை கல்வித்திட்டப் பணிப்பாளர்கள் கவனத்திற் கொண்டு வேகமாகச்செயற்பட்டால் மாணவர் களுடைய தமிழ்மொழிக்கான பங்களிப்பு செம்மை யான நிலையிலே நடைபெறும்.

மனோன்மணி சண்முகதாஸ்

### ஆங்கில மொழியின் வளர்ச்சி

கீழ் ஜெர்மானிய மொழியிலிருந்து முதலில் பிறந்த மொழி ஆங்கிலோ – சாக்ஸன் எனப் படும்பழைய ஆங்கிலம். கி. பி. 449-ஆம் ஆண்டு வாக்கில் இங்கிலாந்தில் புகுந்த இம்மொழி 1150 வரைபேசப்பட்டது. 1150 க்கும் 1500 க்கும் இடையில் பல்வேறு மாற்றங்களுக்குட்பட்ட இந் மொழி மத்தியகால ஆங்கிலம் எனப்பட்டது. இன்று நாம் பேசும் ஆங்கிலம் 500 வருடங்களுக்குமு உருவாகி வளர்ந்தது.

# பல்கலைக்கழக அனுமதியும், தரப்படுத்தலும்
## எமது இன்றைய நெருக்கடிகளும்

சென்றமாத இதழில் வெளிவந்த கட்டுரையின் மிகுதி

மேலும் ஊரடங்குப் பிரகடனங்கள், விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் எறிகணைவீச்சுக்கள், இராணுவ நடவடிக்கைகள் என்பவை காரணமாக வருடா வருடம் கணிசமானளவு நாட்கள் பாடசாலைகளிற் கல்விச் செயற்பாடுகள் இடம் பெறுவதில்லை. பாடசாலை நேரம் தவிர்ந்த வேளைகளிலும் இரவு வேளைகளிலும் மாணவர் தம் படிப்பினை மேற்கொள்வதற்கான வசதிகளும் அரிதாகவே உள்ளன. எரிபொருட் தட்டுப்பாடு, சீரான போக்குவரத்தின்மை காரணமாகப் பிள்ளைகள் துவிச்சக்கர வண்டியைப் பயன்படுத்தியும் நடந்தும் பாடசாலைக்குச் செல்கின்றனர். இதனால் ஏற்படும் நேரவிரயம், உடற்களைப்பு என்பனவும் பெருமளவில் கல்வியைப் பாதிக்கின்றன. இளைஞரின் இயல்பான சுதந்திர வேட்கைக்குப் பலவழிகளிலும் தடைபோட முயலும் அரசின் பல்வேறு செயற்பாடுகள் என்பன அவர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்துகின்றன. இவை யாவற்றிலும் ஏற்படும் உளவியற் பாதிப்புக்கள் விபரிக்க இயலாதவை.

இங்கு நாம் இன்னொரு விடயத்தினையும் கருத்திற்கொள்ளுதல் பொருத்தமானது ஆகும். க. பொ. த (சா. த) கல்வி நிலை பற்றிய நோக்கே அது. க. பொ. த (சா. த) இறுதித்தேர்வில் எல்லாப் பாடங்களிலும் அதிதிறமைச் சித்தி பெறும் மாணவர் எண் ...ிக்கை தமிழ் மாணவரிடையே ...்பு நிலையான வீழ்ச்சியைக் ...ும் அதேவேளை, இத்தேர் ... அடிப்படையில் க. பொ. த ... வகுப்பிற் கல்வியைத் ...வதற்கான தகைமையைப் பெறும் மாணவர் நூற்று வீதமும் வருடா வருடம் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

முழுமையாகப் புள்ளிவிபரங்கள் கிடைக்கப் பெறாத நிலையில் திட்டவட்டமான நிலைமையைக் குறிப்பிட முடியாவிடினும், யாழ் மாவட்டத்தில் க. பொ. த. உயர் தர வகுப்புக்களைக் கொண்ட (1 A, B, 1 C தரப்) பாடசாலைகளின் மாதிரியொன்றிற் பெறப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையிலான முக்கிய கருத்தொன்று இங்கு நோக்கற்பாலது. ஐந்து வருடங்களுக்கு முன்னர் க. பொ. த சாதாரண தரத் தேர்வுக்குத் தோற்றிய பாடசாலை மாணவரில் 46% தினர் உயர் தர வகுப்பிற் படிப்பதற்கான தகைமையைப் பெற்றிருந்தனர். இவ்வீதம் படிப்படியாக வீழ்ச்சி அடைந்து 1992 இல் 39% திலும் குறைவானோரே உயர்தரவகுப்பிற்குச் செல்லும் தகைமையைப் பெற்றுள்ளனர். ஏனைய தமிழ் மாவட்டங்களும் இவ்வாறான ஒரு வீழ்ச்சியைக் கொண்டிருக்கலாமென நாம் கருதமுடியும். கல்வி வசதிகளை வழங்குவதற்குப் பொறுப்பாகவுள்ள அரசின் அசிரத்தையானது இவ்வாறான நிலைமை உருவாவதற்கான ஒரு பிரதான காரணியெனக்கருத முடியும்.


க. பொ. த. (சா / த) தேர்வுக்குத் தோற்றிய பின்னர், உயர் தர வகுப்பினைத் தொடரும் பொருட்டு, அதன் பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் நீண்ட காலம், மாணவரின் கல்விகற்கும் காலத்தினை வீணடிப்பதனையும், பல மாணவரின் உற்சாகத்தினைக் கரைத்து விடுவதனையும் நாம் மறந்துவிடலாகாது. தமிழீழப் பொதுத்தேர்வு இச்சந்தர்ப்பத்தில் இந்த இடைக்கால அவஸ்தைக்குத் தீர்வுகாண முற்படினும், இரு வருடங்களுக்கு முன்னைய க. பொ. த. சாதாரணதர மாணவரின் நிலைமை மிகப் பரிதாபமானதே.

இவ்வாறாகப் பல்வேறு வகையான நெருக்கடிகளின் மத்தியிலும் எமது கல்விப் பாரம்பரியத்தைப் பேணி, முன்னெடுத்துச் செல்வதற்கான வழிமுறைகள் பற்றிச் சிந்திக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனதும் கடமையாகும்.

தன்னையும் தன்சூழலையும் உணரக்கூடியவகையிலும், மாணவனின் இயல்புகளோடு இணைந்த வகையிலும் வழங்கப்படும் ஒரு கல்விமுறை மூலமாக, சாதாரண தர தேர்வில் ஏற்படும் தோல்விகளைக் குறைத்துக் கொள்ளமுடியும். வாழ்க்கையோடு இணைந்த கற்பித்தல் அணுகுமுறைகளும் பொருத்தமான மதிப்பீட்டுமுறைகளும் க. பொ. த. சாதாரண தரத் தேர்வுகளின் பெறுபேறுகளை உயர்த்துவதற்கு உதவும்.

பல்கலைக்கழக அனுமதியைப் பொறுத்தவகையில், வெட்டுப் புள்ளிகளைக் குறைத்துவிட்டால் பிரச்சினைதீர்ந்துவிடும் என நாம் கருதமுடியாது. இது ஒரு தற்காலிக தீர்வுமுயற்சியே தவிர முழுமையான தீர்வுக்கு வழிகாட்டாது. எமது பல்கலைக்கழகங்களில் எமது பிரதேச அபிவிருத்திக்கு ஏற்றவகையிலான கல்வித்துறைகளை விரிவாக்குதல் பற்றியும் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கக் கூடியளவு எண்ணிக்கையில் மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான ஓர் அனுமதி முறைபற்றியும் நாம் தீவிரமாகச் சிந்திக்கவேண்டும்.

திரு. கு. சின்னத்தம்பி
(சிரேஸ்ட விரிவுரையாளர்
கல்வியியற்துறை)
யாழ். பல்கலைக் கழகம்.



# அறிவுலகம்

— ஆனந்தி

இ. மயூரன்
யா/உடுப்புட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி,
வல்வெட்டித்துறை.

❀ பாம்புகள் அடிக்கடி நாக்கை வெளியே நீட்டுகின்றன. அதற்கான காரணத்தைக் கூறுவீர்களா?

பாம்புகள் பொதுவாக இரை தேடும் நேரத்திலேயே அடிக்கடி தமது பிளந்த நாக்கை நீட்டிக் கொண்டு ஊர்ந்து செல்கின்றன. இரையின் வாசனையைக் கொண்டே பாம்புகள் அவற்றை அடையாளம் காண்கின்றன. தமது, உணவின் வாசனையை அறிவதற்காகவே அவை நாக்கை வெளியே நீட்டுகின்றன. மேலும் அவற்றிற்கு உள்ள பற்கள் உணவை மெல்லவோ, அரைக்கவோ, துண்டாக்கவோ பயன்படுவதில்லை. பிடித்த இரை வெளியே தப்பிப் போகவிடாது பற்றிப்பிடிக்கவே பற்கள் இருக்கின்றன. அவற்றின் காதுகள்கூடக் கேட்காது. நில அதிர்வுகள் மூலமே அவை நடமாடுகின்றன.

தேவராஜா முகுந்தன்,
கொழும்புத்துறை.

❀ மண்ணெண்ணெய்யால் இயங்கும் வாகனங்கள் வெளிவிடும் புகையால், சுவாசநோய்கள் ஏற்படும் சாத்தியமுண்டா? அவ்வாறு ஏற்படுமாயின் எவ்வாறு எம்மை பாதுகாத்துக்கொள்ளலாம்?

முகுந்தன்! .. இன்றைய எமது போராட்டச் சூழலில் இத்தகைய மாசுக்கள் நிகழ்வதை உடனடியாகத் தவிர்த்துக் கொள்ள முடியாது. வாகனங்களின் புகைகளில் இருந்து வெளிவிடப்படும் கந்தகநீரொட்சைட்டு,காபநீரொட்சைட்டு, காபனோர்ரொட்சைட்டு, கரித்தூசு என்பன வளிமண்டலத்தில் விடுவிக்கப்படுவதால் இவை சுவாசத் தொகுதியை மிக மோசமாகப் பாதிக்கின்றது. அது மட்டுமன்றி குருதியையும் நஞ்சாக்கும். இதனால் புரோங்கைற்றில், சுவாசப்புற்றுநோய் நுரையீரல் சுழற்சி குருதி நஞ்சாதல் போன்றன ஏற்படலாம். இதனைத் தடுப்பதற்குள்ள ஒரேவழி இத்தகைய வாகனங்களின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் ஆனால் அது சாத்தியப்படாதல்லவா? வாகனங்களின் புகைபோக்கியில் வடி கட்டிகள் (FILTERS) பொருத்தி வெளியேறும் மாசுக்களின் அளவைக் குறைக்கலாம். அத்துடன் வீதிகளிலும், வெறும் தரைகளிலும், வீட்டு முற்றங்களிலும் பெரு மரங்களை நாட்டிப் பராமரிப்பதன் மூலமே தூய வளியை நாம் சுவாசிக்கமுடியும். எனவே மரங்களை நடுங்கள். அவை நம்மை வாழவைக்கும்.

சாந்தினி தாசிசியஸ்
செம்பியன்பற்று வடக்கு, தாளையடி.

❀ தட்டச்சுடன் சுருக்கெழுத்தையும் சேர்த்துப் படிப்பதனால் ஏற்படும் நன்மைகள் எவை?

'ஸ்ரெனோகிராபர்' ஆக வேலை பார்ப்பவர்கள் தட்டெழுத்துடன், சுருக்கெழுத்தையும் அறிந்தவராகவே இருக்கவேண்டும். பொது நிகழ்ச்சிகளிலோ அல்லது கருத்தரங்குகளிலோ அல்லது பாராளுமன்றம், நீதிமன்றம் போன்றவற்றிலோ இடம்பெறும் விடயங்களை உடனுக்குடன் பிரதிசெய்து, தட்டச்சில் இடவேண்டிய நேரங்களில் அவற்றை முழுமையாகப் பதிவுசெய்ய முடியாது போய்விடும். இச்சந்தர்ப்பங்களில், சுருக்கெழுத்துக் கலையே கைகொடுக்கும். அங்கு இடம்பெறும் விடயங்களை முதலில் சுருக்கெழுத்தில் குறித்துப் பின்னர் அதனை எந்தமொழியில் சுருக்கெழுத்தில் குறித்தாரோ அந்த மொழியில் விரிவாக்கி அதனைத் தட்டச்சில் இடும்பொழுது கருத்து முரண்பாடுகள், தவறுகள் இன்றி அவற்றை முழுமையாக வெளிக்கொணரலாம்.

அ. பரந்தாமன்
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

❀ 'ஜேர்மன் சில்வர்' என்பதும், நாம் பயன்படுத்தும் ''சில்வர்'' எனப்படும் வெள்ளி உலோகமும் ஒன்றையே குறிக்குமா?

இல்லை, வெள்ளி என்பது (SILVER) த[illegible] உலோகம். 'ஜேர்மன்' சில்வர் என்பது செ[illegible] நாகம், நிக்கல் ஆகியவை சேர்ந்த ஒரு கலப்பு உ[illegible] கம். இது 1812 ம் ஆண்டில், கிறிட்னர் (GRI[illegible] என்னும் விஞ்ஞானியால் கண்டு பிடிக்கப்[illegible]

அந்த மொழியில் விரிவாக்கி அதனைத் தட்டச்சில் இடும் பொழுது கருத்து முரண்பாடுகள் தவறுகள் இன்றி அவற்றை முழுமையாக வெளிக்கொணரலாம்.

கி. சிவப்பிரகாசம்
யா/குட்டியபுலம் மகாவித்தியாலயம்,
வசாவிளான்.

❀ சூரியனின் மேற்பரப்பில் இருந்துவரும் சக்தி எவ்வெவ் வடிவங்களில் பூமியை அடைகின்றன? இச் சக்தியைச் சிறிது விளக்குவீர்களா?

கண்ணுக்குப் புலனாகும் ஒளிவடிவிலும், புற ஊதாக்கதிர் வடிவிலும் (ULTRA UIOLET RAYS) X - கதிர் வடிவிலும் வெப்பசக்தியாகவும் பூமியை நோக்கிப் பாச்சப்படுகின்றன. இவ்வாறு சூரியனில் இருந்து. பூமியின் வளிமண்டலத்தை நோக்கி ஊடுருவும் இந்தச் சக்தியானது பூமிக்கு 100 ட்ரில்லியன் கிலோவாற் (இலட்சம் கோடி கிலோவாற்) சக்தியை அளிக்கின்றது. அதாவது பூமியின் ஒவ்வொரு சதுர கிலோமீற்றர் பரப்பிலும் விழும் சூரியக்கதிர் வீச்சின் அளவு 1.35 KM அளவாகும். இதை, SOLAR (CONSTANT) என அழைப்பர். இச்சக்தி பூமியை அடையும் புற ஊதாக்கதிர் வீச்சுத்தான் உடலில் TAN எனப்படும் கருமை நிறத்தை அதிகரிக்கின்றது. தோலின் மெலனின் நிறப்பொருளைத் தூண்டுவதால் இவ்வாறு கருமை நிறம் அதிகரிக்கும். இக் கதிரின் அளவு அதிகரிக்கும் பொழுதே தோல் புற்றுநோய் ஏற்படுகின்றது. இத்தகைய தீய விளைவுகளை ஏற்படுத்தும் கதிர்களைப் பெருமளவில் உறிஞ்சும் படையாக இருப்பது வளிமண்டலத்தின் மேல் உள்ள ஓசோன் படையாகும். ஓசோன் படையை அழிய விடாமலோ துவாரங்கள் ஏற்படாமலோ பாதுகாக்கவேண்டியது தமது கடமையாகும். சிவா.... இதே போன்று சூரியனின் இன்னொரு சக்தியான வெப்ப சக்தியும் பூமிக்குப் பாய்ச்சப்படுகிறது. சூரியனின் வெப்ப நிலை 10 000° F முதல் 2,70,00 000° F வரை அதனுள் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றது.

டானியல் ஜோ
தண்ணீர்தாங்கி வீதி, குருநகர்.

❀ ஒளியால் பொருட்கள் துலங்குகின்றன என்றால், இரவில் நடமாடும் விலங்குகள் பொருட்களை எவ்வாறு பார்க்கின்றன?

இரவில் நடமாடும் விலங்குகளுக்கு, இரவு நேரங்களில் பார்வைத்திறன் அதிகமாக இருப்பதினாலேயே, அவற்றால் இலகுவில் பொருட்களைப் பார்க்க முடிகின்றன. அவற்றின் கண்மணித் துவாரம் பெரிதாக விரிவடையும் தன்மையைக் கொண்டிருத்தல், விழித்திரையின் உணர்திறன் அதிகமாக இருத்தல், விழித்திரையின் பின்னால் அமைந்துள்ள ஒரு தெறிபடலம் போன்றவற்றின் காரணமாக இரவில் இலகுவில் பொருட்களைப் பார்க்க உதவுகின்றன.

..ச. அருட்செல்வம்
..ம்பியன்பற்று றோ. க. த. க. பாடசாலை,
..ளையடி.

..நிக்கலஸ் கொப்பனிக்கஸ் என்பவர் யார்? அவ..ரைப்பற்றிச் சிறிது கூறுங்கள்?

கி. பி. 1540 இல் பூமி உட்பட அனைத்துக் கோள்களும் சூரியனை மையமாகக் கொண்டு சுற்றுகின்றன. என்ற கொள்கையை முதன் முதலில் வெளியிட்டவரே நிக்கலஸ் கொப்பனிக்கஸ் என்ற வானியல் ஆய்வாளர். ஆதிகாலமக்களும், பின்னர் வந்த தத்துவஞானியான அரிஸ்டோட்டில், வானியல் நிபுணரான தொலமி என்போரும் கி. பி. 1530வரை கோள்கள் எல்லாம் பூமியை மையமாகக் கொண்டே சுற்றிச் செல்வதாக நம்பினர். நிக்கலஸ் கொப்பனிக்கஸ் போலந்து நாட்டில் 1473 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ம் திகதி பிறந்தார். அவர் சட்டத்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றவராக இருந்தும் வானியல் நிபுணராகவும், கணித விற்பனராகவும், விஞ்ஞானியாகவும், மருத்துவராகவும், மதகுருவாகவும், அரசியல் ஞானியாகவும் விளங்கிப் பல்வேறு துறைகளில் விற்பன்னராகத் திகழ்ந்தவர். பிரபஞ்சத்தைப்பற்றி கணித முறையிலும், தத்துவரீதியாகவும், கொள்கைகளை முறைப்படுத்திக் கூறியமை அவரது சிறப்புக்கு மகுடமாக விளங்கியது. அவர் தமது பேரறிவாலும், பெற்ற அனுபவங்களினாலும் ஆய்வினாலும் கண்டுபிடித்து அறிந்த பெரும் தகவல்களை "றிவல்யூசன்ஸ்" நூலாக எழுதினார். பூமி கோளவடிவமானது என்று நிரூபிப்பதற்கு கடலில் செல்லும் கப்பலின் விளக்கின் தோற்றம், பூமியின் ஒருமுனையில் இருந்து பார்க்கையில் மறுகோள அந்தத்தில் உள்ள நட்சத்திரங்கள் தெரியாமை போன்ற நடைமுறை உதாரணங்கள் மூலம் விளக்கி சாதாரண மக்களும் கூட பூமி கோளவடிவம் என்பதைப் புரியும்படி செய்தார். மேலும் கோள்கள், யாவும் மனம்போனவாறு முன்னும் பின்னும் அசைந்தாலும் கூட அவற்றின் இயக்கங்கள் யாவும் ஒழுங்கானவை என்று கூறி, கோள்கள் இயங்கும் பாதைகளின் நடுநிலையாகச் சூரியன் உள்ளது என்று வைத்துக்கொண்டால் இது விளங்கும் என்றும் கூறினார். அவர் எழுதிய நூலின் முதற்பிரதி அச்சாகி கொப்பனிக்கஸின் கைக்கு வரும்பொழுது, அவர் சித்த சுவாதீனமுற்று, பக்கவாத நோயுற்ற நிலையில் சாகும் தறுவாயில் இருந்தமை துரதிஷ்டவசமானது.

பிரபஞ்சம் சூரியனை மையமாகக் கொண்டது என்ற கொள்கையை முதன் முதலாக வெளியிட்டவர் கொப்பனிக்கஸ் பிறப்பதற்கு 1800 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த லேமாஸ் திவனரான அரிஸ்டார்க்கஸ் என்னும் கிரேக்க வான நூல் நிபுணர் அவர் நடைமுறைச் செய்திகளை உதாரணங்களாக வெளிக்காட்டாது. உத்தேசமாகக்கூறி நிரூபிக்கத்தவறியமையினால், 1800 ஆண்டுகளின் பின்னர் தோன்றிய கொப்பனிக்கசுக்கே அக் கொள்கையை மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில், வற்புறுத்திக் கூறும் வாய்ப்புக் கிடைத்தது.

அன்பான வாசகர்களே!.

சாளரம் வாசகர்களாகிய உங்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள். 'அறிவுலகம்' பகுதிக்கு நீங்கள் அளிக்கும் ஆதரவும், உற்சாகமும் மகிழ்ச்சியைத் தருகின்றது. கேள்விகளைத் தெளிவாக எழுதி முழுப்பெயர் முகவரியையும் குறிப்பிடுங்கள் கேள்விகள் அனுப்பவேண்டிய முகவரி:

'அறிவுலகம்'
'சாளரம்'
வேம்படிவீதி, யாழ்ப்பாணம்.

# சிங்கள ஆட்சியில் அரியாசனம் ஏறமுனையும் ஆங்கிலமும் ஏற்படப்போகும் பாதிப்பும்

— சாரணன் —

இலங்கை அரசு அடிக்கடி கைவைக்கும் துறைகளில் ஒன்று கல்வி. தற்போது ஆங்கில மொழியைக் கட்டாய பாடமாக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது.

சர்வதேச வர்த்தகப் பொருளாதாரத்துடன் இணைக்கப்பட்டுள்ள இலங்கை, அதற்குச் சேவகம் செய்யக்கூடிய வகையில் ஆங்கில மொழியை முதன்மைப்படுத்தவேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

ஆங்கிலம் கட்டாய பாடமாகுமானால் ஏழைகளினதும், கிராமத்துப் பிள்ளைகளினதும் கதி என்ன? சாதாரணமாகவே ஆங்கில ஆசிரியர்கள் இல்லாத இன்றைய சூழலில் கிராமப்புறப் பாடசாலைப் பிள்ளைகள் எவ்வாறு கற்கமுடியும்? நகரங்களைச் சார்ந்த பணக்காரக் கல்லூரிகளினதும், பணக்காரர்களினதும் நிலைவேறு.

இன்று அறிவியலின் சாளரமாக ஆங்கிலமொழி உள்ளது என்பதை நாம் முதலில் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதன் பொருட்டு ஆங்கில மொழி அறிவை வளர்க்கப் போதிய கவனம் செலுத்தப்படவேண்டும். ஆனால் ஆங்கிலத்தை இப்போது கட்டாய பாடமாக்குவதை ஏற்கமுடியாது. இப் பிரச்சினை ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

கொழும்புடன் ஈழத்தமிழராகிய நாம் இன்னும் தொப்புள்க்கொடி உறவைக் கொண்டிருக்கிறோம். தொப்புள்க்கொடி அறும்வரை சிங்கள அரசின் ஒவ்வொரு திட்டமும் எம்மை நேரடியாகத்தாக்கும். இந்தவகையிற் கல்வி முக்கியமானது.

ஐ. தே. க. அரசாங்கம் மிகவும் வஞ்சகமான முறையில் ஆங்கிலத்தைக் கட்டாயமாக்கப் போகின்றது. இப்பிரச்சினையை அடிப்படையிலிருந்தே தெரிந்துவைத்திருத்தல் அவசியம். உண்மையில் ஆங்கிலமொழி மீண்டும் உத்தியோகமொழியாய் வருவதற்குச் சமமாகவே இது உள்ளது.

இதன் தாற்பரியத்தை விபரமாகப் பார்ப்போம். இதன் ஆடத்தை நுணுக்கமாக நோக்குவோம். ஒரு தேசத்தின் கல்விக்கொள்கை என்பது அத்தேசம் கடைப்பிடிக்கும் அரசியற் பொருளாதாரக் கொள்கையின் வெளிப்பாடேயாகும். சர்வதேச வர்த்தகப் பொருளாதாரத்தை அடிப்படையாகக்கொண்டதே இலங்கையின் இன்றைய அரசியற் பொருளாதாரமாகும். உலக வர்த்தகத்தின் ஒரு சந்தையாகவும், ஒரு மையமாகவும் இலங்கை மாற்றப்பட்டுவருகிறது. இந்த சர்வதேச வர்த்தகத்திற்கு ஆங்கிலமொழி அவசியம். சர்வதேச வர்த்தகத்திற்கு எப்படித் தெருக்களும், மற்றும் விமானப் போக்குவரத்து, தொலைத்தொடர்பு, உல்லாசவசதி என்பனவெல்லாம் அவசியமோ அப்படியே ஆங்கிலமும் அவசியம். இலங்கையின் பொருளாதாரம் வர்த்தகப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதேதவிர உற்பத்திப் பொருளாதாரத்தை அல்ல. எனவே வர்த்தகத்திற்குச் சேவைசெய்யக்கூடிய கல்விதான் இருக்குமே தவிர உற்பத்தியை நோக்கித் திறனை வளர்க்கக்கூடிய கல்வியாக இது இருக்கமுடியாது.

வர்த்தகத்தை மையமாகக்கொண்ட சேவைத் துறைசார் கல்விக்கு எமது சிறார்களினதும், இளைஞர்களினதும் மூளை திருப்பப்படலாயிற்று. இதில் தவிர்க்கப்படமுடியாத ஓர் அலகுதான் ஆங்கில மொழிபற்றிய கோரிக்கை.

ஆங்கிலமொழியை நேரடியாகக் கட்டாய பாடமாக்கும் திராணி ஐ. தே. க. அரசாங்கத்திடம் இல்லை. அது சுற்றிவளைத்துப் படிப்படியாக ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்க முயல்கிறது. நேரடியாக, உடனடியாக ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்கினால் சிங்கள - பௌத்தவாதிகள் அரசிற்கெதிராகச் சீற்றமடைவர். சிங்களத்திற்குப் பதிலாக ஆங்கிலம் அரியாசனம் ஏறப்போவதாகக் கர்ச்சிப்பார்கள்.

தற்போது அரசு மிகவும் நாசுக்காகவும், தந்திரமாகவும் இதனை நிறைவேற்ற முயல்கிறது. இதன் முதற்படியாக க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் ஆங்கில இலக்கியத்தை விருப்பத்தேர்வுப் பாடமாக்கியுள்ளது. விருப்பத்தேர்வுப்பாடம் என்ற வகையில் இதனைப்பற்றி ஒருவரும் பெரிதாகக் கருத்தில் எடுக்கவில்லை. ஆனால் நடைமுறையில் இப்பாடத்திற் தேறியவர்களுக்கு வேலைவாய்ப்பில் முக்கியத்துவம் கொடுக்கப்படும். இதனால் மாணவர்கள் இப்பாடத்தை நோக்கி வெகுவாகக் கவரப்படுவர். இவ்வாறு இப்பாடம் பழக்கத்தில் வந்த[illegible] பின்னர் இதனைக் கட்டாயபாடமாக்கும் பிர[illegible]னத்தை அரசு வெளியிடும். இவ்வாறாக எதிர்[illegible] தோன்றாதவாறு சமாளிக்கும் நீண்டகால [illegible]கமே விருப்பத் தேர்வின் உள்ளடக்கமாகும்.

இதேபோல க. பொ. த (உயர்தரம்) பரீட்சைக்கு ஆங்கிலத்தை எப்படித் தந்திரமாக இணைக்கின்றது என்பதை நோக்குவோம். தாய்மொழி, பண்பாடு, ஆங்கிலம் ஆகிய மூன்று பகுதிகளை உள்ளடக்கிய ஒரு கட்டாய பாடத்தை அரசு அமுல் படுத்த உத்தேசிக்கிறது. இந்த மூன்று பகுதியில் பகுதி I ஆகிய தாய்மொழிக்கு 50 புள்ளிகள் எனவும், பகுதி II ஆகிய பண்பாட்டிற்கு 30 புள்ளிகள் எனவும், பகுதி III ஆகிய ஆங்கிலத்திற்கு 20 புள்ளிகள் எனவும் புள்ளிகள் பங்கிடப்படவுள்ளதாக ஒரு அறிவிப்பு உண்டு. இவ்வாறு பார்க்கும்போது தாய்மொழிக்கும் பண்பாட்டிற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக எண்ணி ஆங்கிலம் புகுத்தப்பட்டுள்ளதை ஒருவரும் பொருட்படுத்த மாட்டார்கள். ஆனால் பல்கலைக் கழகப் புகுமுகத்திற்கான இந்தப் போட்டிப்பரீட்சையில் ஆங்கிலத்தை எந்தவொரு மாணவரும் கவனிக்காது விடமுடியாது. இதனால் அரசு எதிர்பார்க்கும் ஆங்கிலத் தேவை கணிசமான அளவு பூர்த்தியாகும். இவ்வாறு இதனைப் பழக்கப்படுத்தியதும் சில ஆண்டுகளின் பின்பு ஆங்கிலம் எனும் ஒரு தனிப்பாடத்தை க. பொ. த (உயர்தரம) பரீட்சைக்கு அரசு கட்டாயபாடமாகப் பிரகடனப்படுத்தலாம்.

எனவே க. பொ. த (சாதாரணம்) தரத்திலும் க. பொ. த (உயர்தரம்) தரத்திலும் இந்த ஆங்கிலத்தை எப்படி அழகாக முலாம்பூசி அரசு அமுல் படுத்த முனைந்துள்ளது என்பதைத் தெளிவாகக் காண முடிகின்றது.

ஆங்கில மொழியை நாம் புறக்கணிக்க முடியாது. அவ்வாறு செய்யவும் கூடாது. அறிவியல் நூல்கள் ஆங்கிலத்தில் ஏராளமாக இருப்பதனால் எமது அறிவை வளர்க்க ஆங்கிலம் அவசியம். எனவே பாலர் வகுப்பிலிருந்து திட்டமிட்டு ஆங்கில அறிவை வளர்த்தெடுக்க வேண்டும். முறையான திட்டமிடலும் வாய்ப்பும் இருக்குமேயானல் சுமாராக 5 வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்ட இளமைப் பருவத்தில் மாணவர் ஆங்கிலத்தில் எழுத வாசிப்பதற்கான அறிவைப் பெற்று விடுவர். இதன் பின்பு ஆங்கிலத்தை மேற்கொண்டு தேவைக்கேற்ற பாடவிதானங்களில் இணைக்கலாம். இதன் பின்பு ஆங்கிலம் எல்லோருக்கும் கண்டிப்பானது என்ற வற்புறுத்தல் 15 வயதிற்கு மேற்பட்ட வகுப்புக்களுக்கு அவசியமில்லை.

முதலில் போதியளவு ஆங்கில ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். சகல கிராமிய மட்டப் பாடசாலைகளுக்கும் பாலர் வகுப்பிலிருந்து உயர் வகுப்புவரை ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். அதன் பின்புதான் ஆங்கிலத்தைக் கட்டாயபாடமாக்கலாம்.

இன்று க. பொ. த (உயர்தரம்) வகுப்பில் ஆங்கிலத்தைக் கட்டாய பகுதியாக இணைப்பது பரந்தளவில் கிராமியப்பாடசாலையிற் படிப்போரையும், ஏழைமாணவர்களையும் கடுமையாகப் பாதிக்கும். இதனால் உயர்குலத்தினரே நன்மையடைவர். ஏழைமாணவர்கள் இத்திட்டத்தினால் உளவியற் தாக்கத்திற்குள்ளாகி ஏனைய பாடங்களிலும் பின்னடைய நேரிடும், அதாவது ஆங்கில மொழியைக் கற்க வசதி அற்ற சூழலைக் கொண்ட மாணவர்கள் ஆங்கிலத்தைக் கற்க அதிக நேரத்தை ஒதுக்க வேண்டியேற்படும் என்பதால் ஏனைய பாடங்களிலும் வீழ்ச்சியடைய நேரலாம்.

கொழும்பை மையமாகக் கொண்ட வெளிநாட்டு நிறுவனங்களின் வற்புறுத்தலுக்கு இணங்கவே அரசாங்கம் ஆங்கிலத்தை முதன்மைப்படுத்துகிறது. சிங்கள பௌத்தர்கள் இதனை எதிர்க்க நேரிடும் என்ற அச்சத்தால் பண்பாட்டை முதன்மைப்படுத்துவது போன்ற ஒரு போலி நாடகத்தை இப்பாடத் திட்டத்தில் அரசு சேர்த்துள்ளது. இதுவே பண்பாட்டிற்கு 50 புள்ளிகள் என்னும் நாடகமாகும். ஐ. தே. க அரசாங்கத்தின் கீழ் பண்பாடு எவ்வளவு தூரம் சீரழிந்துள்ளதென்பதற்கு ஒரு சிறு உதாரணத்தைக் கூறலாம். அதவாது ஐ. தே. க. வின் திறந்த பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ந்து உலகிலேயே அதிகளவு சிறுவர்களை விபச்சாரத்தில் அமர்த்தும் நாடு என்று பட்டம் இலங்கைக்குக் கிடைத்துள்ளது. வெள்ளையர்களுக்கு இலங்கைச் சிறுவர்களின் தசையை விலைகூறி விற்கும் அரசு பண்பாட்டைக் கட்டாய பாடமாக்கும் நடத்தை ஒரு கேலிக்கூத்தே தவிர வேறில்லை. அதிஷ்டவசமாக தமிழீழப் போராட்டத்தின் எழுச்சியால் இக் கலாச்சாரச் சீரழிவு தமிழ் மண்ணில் பரவ முடியவில்லை. உல்லாசப் பிரயாண விடுதிகள், நீச்சற் தடாகங்கள், இரவு நடன மண்டபங்கள், விபச்சார விடுதிகள், குடிபோதைக் கொட்டகைகள், குதிரைப் பந்தயங்கள், சூதாட்டத்திடல்கள் என பண்பாட்டுச் சீரழிவு நீள்கிறது.

இவர்களின் பண்பாடு எமது தமிழ் மண்ணில் பரவமுடியாதென்பது மகிழ்ச்சிதான். ஆயினும் இவர்களின் கல்வித்திட்டம் எம்மைப்பாதிக்கும். அனைவருக்கும் சமவாய்ப்பு, கௌரவமான சமூகவாழ்வு, செழிப்பான சமூக முன்னேற்றம் ஆகிய இவையனைத்தும் ஒருங்கிணையக்கூடியவகையில் கல்வித் திட்டமானது அமையவேண்டும். சமவாய்ப்பற்றதும் ஒருசில பகுதியினருக்கு மட்டுமே சேவைசெய்யக் கூடியதுமான எத்தகைய கல்வித்திட்டத்தினையும் அது எத்தகைய கவர்ச்சிகரமானதாக இருந்தாலும் ஏற்கமுடியாது.

## முதியவரைச் சதுரங்கத்தில் வென்றவர்

அமெரிக்காவைச் சேர்ந்த ஏழு வயதுச் சிறுவனாகிய ஏரியெல் அலிகாட் வேர்னன் (ARLEI ...IGAD VERNON) 1987-ஆம் ஆண்டு டிசெம்பர் ஐந்தாந்திகதியன்று முதிர்ந்த சதுரங்க ஆட்ட...ளர் ஒருவரைத் தோற்கடித்து உலக சாதனையைப் புரிந்துள்ளார்.

அரும்பு

மாணவர் ஆக்கங்க

## செப்பு சாளரே

இளையோர் திங்கள் இதழ் எங்கள்
இதயத்தை கவர்ந்த சாளரம்
சாதாரண நாம் கவிபாட
சாற்றிட வந்த சாளரமே

வந்தனங்கள் என்று கூறி
வாழ்த்துகிறேன் இவ்வையகத்தில்
பரந்த இந்த தாய் மண்ணில்
பணிவுடனே வீறுநடை போட்டுடிவீர்

சோலைமலர் மலர்ந்த வேளையில்
சொல்லற்று வீழ்ந்தனரே எம் மாவீரர்
மாவீர தியாகம் சொல்ல
மாண்புடனே எழுந்ததெங்கள் சாளரமே

வேம்படி தன்னில் வீற்றிருக்கும் சாளரமே
சாதனை பல புரிந்து
தமிழீழ தாய் மண்ணில் நிலைத்திடுவாய்.

சி. யுகந்தினி
கிளி/சென்திரேசா
ம. ம. வி.



... தமிழர் நாம்.
விடியலே ஏன் தயங்குகிறாய்?

இருள் மேகம் இன்று
எம் தமிழினத்தைச் சுற்றி!
அருள் கொண்டு விடிவே நீ.
மறுப்பின்றி வந்திடுவாய்!

தாங்கவில்லை எம்மால்,
தவிக்கின்றோம் தினமும்! - இம்
மண்ணின் மாந்தரெல்லாம்.
உன் வரவை எதிர்பார்த்து ......

விடிவே உனக்காய்
போராட்டம் கூட
எம் இனத்தில் தொடர்கிறது!
நீ மட்டும் ஏன் வரவில்லை?

போதும் விடிவே!
பொறுமை கடந்தது.
விரைவில் நீ இங்கு
வருக! வருக!

வை. சுநனியா
அரியாலை.

## நலிந்துபோகும் மனித இனமே!

ஓ...... மனிதா உனது நிலை இதுவா?
உனது இளைய சமுதாயமும் இதுவா?
இல்லை இல்லை எழுந்திடு
நாற்பக்கமும் விரைந்து பார்
உனது நிலையை அறிந்திடு
பொறுத்தது போதும் கொதித்தெழு
புயலாய்க் களத்தில் விரைந்திடு
புதிய வரலாறு படைத்திடு
உனது இனம் சிறந்திடும்.


இ. ரேணுகா
ஆண்டு 10A
யா/இந்து மகளிர் கல்லூரி

## நாட்டுக்காக உழைப்போம்

சுகமான வாழ்வுதனை
சுப்பர்சொனிக் கெடுத்ததுவே
நம்பிள்ளை நாளையிங்கே
நடுத்தெருவில் நிற்பதுவோ
முன்னோர் செய்த தவறினாலே
முழித்துக்கொண்டு நிற்கிறோம்
நாளைய நம்சிறாரை எண்ணி
நாட்டுக்காக உழைப்போமே

அருந்த
சாவகச்

# நான் பள்ளிச் சிறுவனாக இருந்தபோது...



கேள்வி;- *இலங்கைத் தமிழர்களுக்கு ஆயுதப்போராட்டமே ஒரேவழியென்று நீங்கள் தீர்க்கமான முடிவிற்குவர நிர்ப்பந்தித்த உங்களின் தனிப்பட்ட அனுபவங்களைச் சற்றுக் கூறுவீர்களா? கல்வி, வேலைவாய்பபு ஆகியவற்றில் இலங்கை அரசு காட்டிய பாரபட்சமான கொள்கையால் நீங்களோ உங்கள் குடும்பத்தவரோ அல்லது உங்கள் நண்பர்களோ நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனரா?*

பதில்:- நான் பள்ளிச் சிறுவனாக இருந்தபோது 1958 ம் ஆண்டின் இனக்கலவரங்களில் நிகழ்ந்த பயங்கரச் சம்பவங்கள் என் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தின. சிங்கள இனவெறியர்களால் எம் மக்கள், ஈவிரக்கமில்லாது குரூரமாகக் கொல்லப்பட்ட நெஞ்சை உருக்கும் சம்பவங்களை நான் கேள்விப்பட்டேன். எங்கள் குடும்பத்திற்குத் தெரிந்த ஒரு விதவைத்தாயை நான் ஒருமுறை சந்தித்தபோது அவர் இந்த இனவெறியாட்டத்தால் தனக்கு நேர்ந்த துயரமான அனுபவத்தை என்னிடம் சொன்னார். இனக்கலவரத்தின்போது ...களக் காடையர்கள் கொழும்பில ...த அவரதுவீட்டைத்தாக்கினார்கள். ...ரது வீட்டுக்குத் தீவைத்து, அவரு...டய கணவரையும் குரூரமாகக் ...லைசெய்தனர். அவரும் அவரது ...ளைகளும் பலத்த எரிகாயங்களு...ன் தப்பினார்கள். அவரது உடலில் ...ணப்பட்ட எரிகாயத் தழும்புகளைப் ...ார்த்தபோது நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். சிறு குழந்தைகளைக் ...கொதிக்கும் தாருக்குள் உயிருடன் வீசிக்கொன்ற கோரச்சம்பவங்களை நான் கேள்விப்பட்டேன். அநாதரவான அப்பாவித்தமிழர்கள் எவ்வாறெல்லாம் கொடூரமான தாக்குதலுக்கு இலக்காகினர் என்பதையெல்லாம் கேட்கும்போது என் மக்கள்மீது ஆழ்ந்த அனுதாபமும், அன்பும் ஏற்பட்டன. இந்த இனவெறி அமைப்பின் பிடிக்குள்ளிருந்து எமது மக்களை மீட்டெடுக்க வேண்டுமென்ற பெரும் உந்துதல் என்னிடம் தோன்றியது. நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கு எதிரான ஆயுத வலிமையைப் பிரயோகிக்கும் இந்த அமைப்பினை ஆயுதப் போராட்டத்தின் மூலமே எதிர்கொள்ள முடியும் என்று நான் ஆழமாக உணர்ந்தேன்.

---

*தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் இந்தியாவில் இருந்து வெளிவரும் பிரபல சண்டே (Sunday) எனப்படும் ஆங்கில வாரஏட்டிற்கு அளித்த பேட்டியிலிருந்து.*

நன்றி. சண்டே (Sunday)
(11, 17 மார்ச் - 1984)

# எனது எழுத்துப்பணிக்கு குறுக்கீடாய் உள்ளது பாடசாலை
## - 13 வயது எழுத்தாளன் -

இந்தியாவின் ஹைதராபாத் என்ற ஊரைச் சேர்ந்த சந்திரஹால் சௌத்ரி என்ற பதின்மூன்று வயதுச்சிறுவன் இதுவரை 1500 கவிதைகள் 400 கதைகள், 12 குறுநாவல்கள், ஒரு நாவல் ஆகியவற்றை எழுதி முடித்திருக்கிறான். தற்போது இரண்டு நாவல்களை எழுதிக்கொண்டிருக்கிறான்.

1980 ஆம் ஆண்டு பிறந்த இச்சிறுவன், ...ன்று வயதாக இருந்தபோதே சின்னச் சின்னக் ...விதைகளை எழுத ஆரம்பித்துவிட்டானாம். ...தாவது வயதில் கதை எழுதுவது ஆரம்ப...து பாடசாலைப் பரீட்சை நேரத்தைவிட மற்ற நேரங்களில் தினமும் எழுதிக்கொண்டே இருப்பதுதான் இவனது பொழுதுபோக்கு.

"எழுபத்திரண்டு மாணவர்கள் கொண்ட வகுப்பில் எனக்குத் தனிச்சலுகை எதுவும் தரப்படுவதில்லை. பள்ளிப்பாடங்களைப் படித்துக் கொண்டு, வீட்டுப் பாடங்களைச் செய்து கொண்டு, எனக்குப்பிடித்த விடயமான எழுத்தை மேற்கொள்வது கடினமாகவுள்ளது. பாடசாலை எனது எழுத்துப்பணிக்கு குறுக்கீடாய் உள்ளது" இவ்வாறு சொல்கிறான் இச்சிறுவன். பாடுதல், ஓவியம் வரைதல் போன்றவற்றிலும் சௌத்திரிக்கு ஆர்வமுண்டாம்.

## துயரோடு வளர்ந்த கல்வி புயலோடு போதல் நியாயமா?

காரிருட்டில் தணல்பிடித்துக்
கற்றகல்வி கலங்குகிறதே!
நேற்றுவரை துயில் மறுத்த
நீள்விழியில் நீர் விழுந்து
ஆழ் கடலாய்த் தானெழுந்து
உற்ற எமை வதைக்கிறதே!
பெற்றமனம் பதைக்கிறதே!
நன்றாகப் படிக்கவென்று
எண்ணங்கள் தாங்கித்தான்
முந்நூறு ரூபாய்க் கெண்ணை
வாங்கித் தந்த அன்னை தந்தை
ஏங்கித்தான் துடிக்கிறார்கள்!
எப்படித்தான் நாமுரைப்போம்
மின்சாரத் தடையென்று
அந்நாளே விதித்தவர்கள்
எந்நாளும் குண்டுகளால்
எம்கல்வியை மிதித்தவர்கள்
எண்ணடங்காத் துயர்தனிலும்
எரிமலையாய் நின்றன்று
கண்ணாறக் கற்றவரின் .....
கல்வியையும் அழிக்கிறார்கள்.

கண்கெட்ட கயவரின்று!
தோல்வியே அறிந்திடாத்
தமிழர் தம் கல்வியை ......
வேள்வியில் போட்டல்லோ
வதைக்கிறார்கள்; என்னவென்போம்;
போரிலே புலியை வெல்ல
வீரமில்லா பகைவா நீ
வேரோடு எம் கல்வியை
வீழ்த்தவா நினைக்கின்றாய்!
எதுகையில் ஏந்த வேண்டும்
என்றெமக்குத் தெரிந்தும்
அது ஏந்த மறந்ததனால்
இது எமக்கு நடக்கிறது!
பட்டம் எடுக்கவல்ல......
பலதகுதி மாணவர்களைத்
திட்டம் போட்டு நீ
மட்டம் தட்டிடவோ?
உந்தன்... கொட்டம் அடக்கவே
குமுறி எழுகின்றோம்!
சட்டம் இனி வேண்டாம்
சிந்திப்பாய் ஒரு கணம்!

வேலணையூர் சுரேஸ்

(வெட்டுப்புள்ளியைக் கண்டித்து வடித்த கவிதை)

---

அரும்புகள் பகுதிக்கு ஆக்கங்கள் அனுப்பும் மாணவர்கள், கவிதை, துணுக்குகள் போன்றவற்றை சுருக்கமாக எழுதியனுப்பவும். விடயங்கள் யாவும் சமகாலப் பிரச்சினைகளை மையமாகக் கொள்ளுதல் நலம்.

---

## டியாகோ கார்சியா (DIEGO GARCIA)

இது இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் தென்பகுதியில் அமைந்திருக்கும் ஒரு சிறிய தீவாகும். இது 10. 5 சதுரமைல் பரப்பைக்கொண்டுள்ளது.


16-ம் நூற்றாண்டில் போத்துக்கேயரால் முதன் முறையகாக் கண்டுபிடிக்கப்பட்ட இத்தீவு மொறிசியஸ் நாட்டின்மீதே பெரும்பாலும் தங்கியிருந்தது. 1965 ல் பிரித்தானியர் இதனை இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் தமது ஆதிக்கத்திற்குரிய ஒன்றாகப் பிரகடனஞ்செய்து, அதன்மீது மொறிசியஸ் கொண்டிருந்த உறவுகளைத் துண்டித்துவிட்டனர். 1970 ம் ஆண்டுவரையும் இது தென்னைப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த ஒரு தீவாகும். இதன் பிரதான உற்பத்திப்பொருள் கொப்பறா. ஆனால், 1970ல் இத்தொழிலில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானோர் மொறிசியசிக்கு அகற்றப்பட்டுவிட்டனர். ஐக்கிய அமெரிக்கா இத்தீவில் இராணுவத்தகவல் தொடர்புச் சாதனங்களை அமைத்துருவாக்குவதற்கு வழி செய்யும் முகமாகவே இவ்வாறு செய்யப்பட்டது. இதற்கான ஒப்புதலை அமெரிக்கா 1966-ம் ஆண்டில் செய்யப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் மூலம் பிரித்தானியாவிடமிருந்து பெற்றுக்கொண்டது.

இது வான்படை, கடற்படை ஆகியவற்றிற்கு ஒரு தளமாக விருத்திசெய்யப்படுவதனை இந்து சமுத்திரப் பிராந்தியத்திலுள்ள அநேக நாடுகள் எதிர்க்கின்றன. இந்துசமுத்திரப் பிராந்தியம் இராணுவசூனியப்பிரதேசமாக - சமாதானப் பிரதேசமாக பிரகடனஞ்செய்யப்படவேண்டுமென்று இந்நாடுகள் கோருகின்றன.

# பயன் தரு தகவல்கள்


## ஜி. பி. எஸ். குரலொலிமூலம் வாகனத்தைச் செலுத்துதல்
## G. P. S. VOICE NAVIGATION

நீங்கள் செல்லவேண்டிய இடத்தினை உங்களது காரிற்குக் கூறவும், அந்த இடத்தை அடையப் பாதைநெடுகிலும் நீங்கள் கடந்துசெல்ல வேண்டிய வீதிகள், இடங்கள் போன்றவற்றை ஒன்றன்பின் ஒன்றாகக் காட்சி மூலமாகவும் ஒலிமூலமாகவும் அது விளங்கவைக்கிறது. இவ்வாறு செயற்படும் கருவியை TMT என்ற நிறுவனம் அண்மையிற் கண்டுபிடித்துள்ளது இதன் பெயர் "ஜி. பி, எஸ். வோயிஸ் நவிகேசன்" (G. P. S. Voice Navigaton). இதில் "குளோபல் பொசிசனிங் சிஸ்ரம்" (Global Positioning System) என்றால் புவிமீது எவ்விடத்திற் சென்றுகொண்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டும் கருவி எனப்பொருள்படும்.



பூங்காக்கள், காவற்றுறை நிலையங்கள், அரச அலுவலகங்கள் போன்றவை திரையில் விழுகின்றன.

ஏற்கெனவே புழக்கத்திலுள்ள பாதைகாட்டிக் கருவிக்குக் குரலொலி இயக்க ஆற்றலையுங்கொடுத்துத் திருத்தியமைத்ததானது வாகனத்தை ஓட்டிச் செல்லும்போது நாமிருக்கும் பிரதேச அமைப்பைப் பற்றி வெளியே பாராமல் வீதியையும் திரையையும் பார்த்தவாறு வாகனத்தை ஓட்டச் சாரதிக்கு உதவுகிறது.



பாதை காட்டும் அறிவுறுத்தல்கள், காட்சி மூலமாகவும், ஒலி மூலமாகவும் வழங்கப்படுகின்றன.


இக்கருவி பொருத்தப்பட்ட காரில் வர்ணத்திரை ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது. வாகனம் ஓட்டிக்கொண்டிருக்கும்போது வாகனத்தை அண்டிய நிலப்பரப்பிற் காணப்படும் காட்சிகள் இத்திரையில் வீழ்கின்றன. திரையில்விழும் இக்காட்சி ஆகக்கூடியது 1 : 10000 என்ற வீத பரப்பளவிலும் (Scale) ஆகக்குறைந்தது 1 : 2500000 என்ற வீத பரப்பளவிலும் விழ்கின்றன. சாரதிகள் தாங்கள் சென்றடையவேண்டிய இடங்களைக் கருவிக்குக் கூறும்போது அவ்விடங்களின் முகவரிகளை, தொலைபேசி இலக்கங்களை, இடங்களின் பெயர்களைக் கூறுவார்கள்.

நிலப்பரப்பில் வாகனஞ் சென்றுகொண்டிருக்கின்ற சரியான இடத்தை இக்கருவி காட்டுவதற்கு இரு சாதனங்கள் காரணமாக உள்ளன.

1. செய்மதித் தொடர்பு: வாகனம் சென்றுகொண்டிருக்கும் இடத்தைச் செய்மதி அவதானித்து அறிவிக்கிறது.

2. ஜப்பானிலுள்ள வீதிகள் அனைத்தையும் காட்டும் படங்களைக்கொண்ட எட்டுக் கணனித் தட்டுக்கள் (CD): இவைகள் காரின் பின்புறமுள்ள பொதி அறைக்குள் (Trunk) பொருத்தப்பட்டுள்ளன.

இதற்குரிய தகவல் வங்கி 8 கணனித்தட்டுகளில் போடப்பட்டுள்ளது. (C. D. Information Bank) ஜப்பானிலுள்ள ஏறக்குறைய 150,000 வீதிச் சந்திகளின் பெயர்களும் இதில் பதியப்பட்டுள்ளன ஒலிமூல அறிவுறுத்தல்களை நிறைவான வசனத்தில் வழங்குகிறது. ஒரு சந்தியில் வாகனத்தைத் திருப்புவதற்கு முன்னர் அவ்வசனங்கள் பல முறை கூறப்படுகின்றன. உதாரணமாக: மணியின் ஒலிகேட்டதும், "அடுத்த நாலு கிலோ மீற்றர் தூரத்திற்கும் இவ்வீதியால் செல்லவும்" இந்த வசனத்தை அடுத்து மணி ஒலிகேட்டு "முன்னுள்ள 700 மீற்றர் தூரத்துள் வரும் ABC வீதியில் இடது



டோக்கியோவிலிருந்து கண்மா (Gunma) என்ற இடத்திற்குச் செல்லவேண்டிய 251 கிலோ மீற்றர் தூரத்தை எந்தெந்த பாதை வழியாகச் சென்றடையலாமென்பதை "ஜி. பி. எஸ். நவிகேசன் சிஸ்ரம்" அதன் வண்ணத்திரையிற் காட்டுகிறது.

(28 ஆம் பக்கம் பார்க்க)

# மார்ஷல் டிற்றோ (MARSHALL TITO)



டிற்ரோவின் சொந்தப் பெயர் யோசெப் புறொஸ் (Josef Broz) என்பதாகும். யூகோஸ்லாவிய நாட்டு அரசியல் மேதை. சோவியத் ஒன்றியம் யூகோஸ்லாவிய கொம்யூனிஸ்டுகள் மீது செலுத்தி வந்த ஆதிக்கத்தை 1948-ல் புறக்கணித்துச் செயற்பட்ட முதல் கொம்யூனிஸ தேசியத் தலைவராவார் இதனால் தனது நாட்டிற்கேற்ற கொம்யூனிஸத்தை உருவாக்கினார். இதனை 'டிற்றோசிம்' (Titoism) என அழைக்கலாயினர்.

இவர் 1892 மே 07-ந் திகதியன்று கும்றோவெக் (Kumrovec) என்ற கிராமத்தில் பிறந்தார். 1920-ல் யூகோஸ்லாவியா கொம்யூனிஸ்ட் கட்சியிற் சேர்ந்தார். இவரது கொம்யூனிஸ நடவடிக்கைகளுக்காகப் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டார். 1937 இல் ரஷ்யாவின் பிரதமராயிருந்த ஜோசெப் ஸ்ராலின் ரஷ்யாவில் தங்கியிருந்த யூகோஸ்லாவிய கொம்யூனிஸ்டுகளைக் களையெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டசமயம் டிற்றோ ரஷ்யாவிலிருந்து யூகோஸ்லாவியா திரும்பி கொம்யூனிஸ்ட் கட்சியைப் புனரமைத்தார். இப்பணியில் தீவிரவாத இளைஞர்களையும் சேர்த்துக்கொண்டார்.

சீர்குலைவுற்றிருந்த யூகோ மக்களிடையே சகோதரத்துவம், ஒருமைப்பாடு என்ற உணர்வைத் தூண்டி சுதந்திரமடைந்தபின் சகல இனமக்களுக்கும் சமத்துவம் வழங்கப்படுமென அறைகூவல் விடுத்தார். மக்கள் எழுச்சி விரைவிற் தீவிரமடைந்து கோடைகால முடிவில் யூகோஸ்லாவியாவின் அரைவாசி மீட்கப்பட்டது.

1943-ல் ஜேர்மனி இத்தாலியின் உதவியுடன் யூகோஸ்லாவியா மீது இரு பெருந்தாக்குதல்களை மேற்கொண்டது. 'பாட்டிசன்' (Paatisan) எனப்படும் யூகோஸ்லாவிய மக்கள்படை ஜேர்மனியரின் சுற்றிவளைப்பை முறியடித்து வெற்றி கண்டது. 1943 செப்ரெம்பரில் இத்தாலி நேசப்படைகளிடம் சரணடைந்த சமயம் டிற்றோவின் மக்கள்படை (பாட்டிசன்) 2,50,000 பேர்களைக் கொண்டிருந்தது. மொஸ்கோ உட்பட எந்த வல்லரசிற்கும் அறிவிக்காமல் பாட்டிசன் நாடாளுமன்றத்தைக் (யூகோஸ்லாவியாவின் தேசியவிடுதலைக் குழுவினரின் பாசிஸ எதிர்ப்புச் சபை) கூட்டினார் இந்நாடாளுமன்றம் தற்காலிக புரட்சிகர அரசாங்கத்தை அமைத்து யூகோஸ்லாவியாவைச் சமவுரிமைகொண்ட மக்கள் சமஷ்டியாட்சிச் சமுதாயமெனப் பிரகடனஞ் செய்தது. டிற்ரோவிற்கு 'மார்ஷல்' என்ற பட்டத்தையும் வழங்கியது.

யூகோஸ்லாவியாவை மொஸ்கோவின் கட்டுப்பாட்டில் இல்லாமல் சுதந்திரநாடாக இயங்கவைக்க டிற்றோ உறுதிபூண்டார். இந்த நிலைப்பாடு, உலகளாவிய கொம்யூனிஸத்திற்கு எதிரானதென்பதால் ஸ்ராலினுடன் இவர் முரண்படவேண்டியதாயிற்று. டிற்ரோவை மடக்க ஸ்ராலின் பலவழிகளிலும் அச்சுறுத்தல்களைப் பிரயோகித்தார். இந்த அச்சுறுத்தல்கள் யூகோ மக்களை டிற்ரோவின்கீழ் மென்மேலும் அணிதிரளச்செய்தன.

1953 ஜனவரி 13-ந் திகதியன்று யூகோவின் முதல் ஜனாதிபதியாகவும் அத்துடன் ஆயுட்கால ஜனாதிபதியாகவும் டிற்ரோ தெரிவு செய்யப்பட்டார். யூகோ சோசலிஸ்ற் சமஷ்டிக் குடியரசிற்குப் புதிய அரசியல்யாப்பு 1953 ஏப்ரல் 7-ம் திகதியன்று நிறைவேற்றப்பட்டது.


வல்லரசுகளுடன் அணிசேராக் கொள்கையை டிற்றோ கடைப்பிடித்தார். இந்தியாவின் நேருவுடனும் எகிப்தின் நாசருடனும் டிற்றோ இணைந்து 25 நாடுகள் சேர்ந்த அணிசேரா மாநாட்டைக் கூட்டினார். இம்மாநாடு காலனித்துவ ஆட்சியை நிராகரித்தும், சுதந்திரமக்களுக்கெதிரான ஆயுதப் போரைக் கண்டித்தும், அல்ஜீரியப் போரை ஆதரித்தும், தென்னாபிரிக்க இனவொதுக்கலைக் கண்டித்தும் 27 அம்சப் பிரகடனத்தை அங்கீகரித்தது. 1968-ல் செக்கோஸ்லவாக்கியாவை சோவியத் ஒன்றியம் ஆக்கிரமித்ததைக் கண்டித்தார். இது சோசலிஸ நாடுகளின் தன்னாதிக்க உரிமையை மீறிவிட்டதாகக் கூறினார்.

டிற்றோவினால் முன்வைக்கப்பட்ட கூட்டு ஜனாதிபதி பதவிமுறை 1974 அரசியலமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 1980 மே 4ந் திகதியன்று யூகோவினுள் லுப்ஜினா என்ற இடத்தில் மரணமானார். டிற்றோவின் மரணத்திற்குப்பின் அதிகாரம் கூட்டு ஜனாதிபதிக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. யூகோ மக்களின் நன்மதிப்பைப் பெற்றதனால் மூன்று தசாப்தங்களாக அவர்களின் தலைவராக இருக்க முடிந்தது.

டிற்ரோவின் காலத்தையே யூகோ இன்று இல்லை. இனரீதியாக உடைந்து தனித்தனி நாடாக நிற்கின்றது. பிரிந்து தனித்து நிற்கும் ஒவ்வொரு நாடுகளும் பல்லின மக்களைச் சிறுபான்மையினராகக் கொண்டுள்ளன. இச்சிறுபான்மை இன மக்கள் அயல் நாட்டில் பெரும்பான்மையினராகவும் உள்ளனர். மாநிலங்களைப் பல்லின மக்கள் கொண்டதாக அமைக்க டிற்றோ காரணமாக இருந்தார் எனத் தற்போது அவர் மீது குற்றஞ்சாட்டப்[illegible]கிறது. இன அடிப்படையில்லாது யூகோஸ [illegible] படையில் மாநிலங்கள் பிரிக்கப்பட்டது [illegible]னைக்கு வழிகோலியது. எனக் கூறப்படுகிறது[illegible]

## ஜோர்ஜ் பேர்னாட் ஷா (GEORGE BERNARD SHAW)

**1856** ஜுலை 26-ல் இங்கிலாந்தில் பிறந்த இவர் ஐரிஷ் நகைச்சுவை நாடகாசிரியராகவும், இலக்கிய விமர்சகராகவும் சோசலிஸப் பிரச்சாரவாதியாகவும் இருந்ததுடன் 1925-ல் இலக்கியத்திற்கான நோபல் பரிசையும் பெற்றார். இள



வயதிலேயே எழுத்துத் துறையில் மிகுந்த ஆர்வம் காட்டிய இவருக்கு அங்கு வரவேற்பு இருக்கவில்லை 20-ம் வயதளவில் வறுமையின் பிடியினாலும் தனது எழுத்து முயற்சிகளுக்குக் கிடைத்த நிராகரிப்பின் விரக்தியினாலும் நன்கு வேதனையடைந்திருந்தார்.

எழுத்து முயற்சிகள் தோற்றுவிட்ட நிலையில் தன்னை ஒரு சோசலிசவாதியாகவும், கேட்போரை மயக்கும் பேச்சாளியாகவும், தாவர உணவைமட்டும் உண்பவராகவும், ஒரு நாடகாசிரியராகவும் மாற்றிக் கொண்டார் மறைந்திருந்த திறன்கள் வெளிவரவே அவர் ஒரு சிறந்த புத்திஜீவியாகவும் ஆங்கிலேயரின் சோசலிஸப்பிரச்சாரகரும் ஆனார்.

1890 களில் நாடக உலகில் நன்கு பெயர் அடிபடும் பேர்வழியாகிவிட்ட இவர் வறுமையால், சமூகக் கேடுகளையும் நகைச்சுவைமூலம் சாடுவதில் முன்னின்றார். இங்கும் ஆட்சிப்பீடத்தினரால் தொல்லைகள் தரப்பட்டன. எனினும் வரலாற்றில் இதுவரையும் போற்றிப்பேசப்படும் நாடகங்கள் பலவற்றை எழுதிச் சமூகப்புரட்சி செய்தார். இவரது பிக்மலியன் (Pygmalion) என்ற 1913-ல் மேடையேற்றப்பட்ட நாடகம் 1938-ல் சினிமாப்படமாக்கப்பட்டது. இது அக்கடமி பரிசில்களை வென்றெடுத்தது. மை பெயர் லேடி (My Fair Lady) என்ற 1964-ல் வெளிவந்த சினிமாப்படம் இவரின் தரத்தை இப்போதுள்ளவர்களும் கணிக்கக்கூடிய தன்மையை நிலைநிறுத்துகிறது. சீசரும் கிளியோபற்றாவும் (Caesar and Cleopatra) என்ற இவரதுபடைப்பு உலகப்புகழ் பெற்றது. 1950-ல் இவர் காலமானார்.

## அச்சு இயந்திரம் உருவாகியது எப்படி?

அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படும் முன் மனித இனத்திற்கு ஏற்பட்ட அறிவு நஷ்டம் எவ்வளவு என்று கணக்கிடமுடியாது. அச்சுமுறை கண்டுபிடிக்கப்படாதபோது மனிதன் கையெழுத்தினால் புத்தகங்களை எழுதிவந்தான். ஒரு புத்தகம் எழுதி முடிப்பதற்கு பல வருடங்கள் பிடித்தன.

அச்சுமுறை முதலில் சீனாவில் தோன்றியது. 868-ம் ஆண்டில் மரத்தில் அல்லது உலோகத்தில் எழுத்துக்களைப் பொறித்து முதன்முதலாக இங்கேதான் புத்தகம் உருவாகியது. 15 ம் நூற்றாண்டிற்கு மத்தியில் ஜேர்மனியைச் சேர்ந்த ஜான்கூடன்பர்க் என்பவரால் முதன்முதலாக அச்சு இயந்திரம் உருவாக்கப்பட்டது. ஆயினும் 1476 ம் ஆண்டு இங்கிலாந்தைச் சேர்ந்த விலியம் காக்ஸ்டைன் என்பவரால் முதன் முதலாக வெற்றிகரமான அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டது.

19-ம் நூற்றாண்டில் நீராவி இயந்திரம், மின்சாரம் என்பன கண்டுபிடிக்கப்பட்டதால் அச்சுமுறையில் வெகுவேகமான முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இதேகாலத்தில் அச்சுக்கோர்க்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இயந்திரத்தினால் தட்டச்சில் செய்வதுபோல விரைவாக அச்சுக்கோர்க்க முடிந்தது. இதற்குமுன்பு கையால் பலமணிநேரங்கள் வேலைசெய்து அச்சுக்கோர்க்கும் பணிநடந்தது. இன்று அச்சடிக்க பல ஏற்ற முறைகள் வழக்கத்திற்கு வந்துள்ளன. அவைகளுள் லெட்டர் பிரஸ் பிரிண்டிங், லித்தோகிராபிக் பிரிண்டிங், டிகரேவரி பிரிண்டிங் என்பன முக்கியமானவை. லித்தோகிராபி முறையிலிருந்து ஆப்செட் பிரிண்டிங்முறை வளர்ச்சியுற்றது. அச்சுமுறையின் கண்டுபிடிப்பால் மனித இனத்தின் அறிவு வளர்ச்சிக்கும் நிறைவுக்கும் வழிகோலப்பட்டது.

---

ஜி. பி. எஸ்... 26-ஆம் பக்கத் தொடர்ச்சி ..

புறமாகத் திரும்பவும்'' எனவும் கூறும். சந்தியில் திருப்புவதற்கு 300 மீற்றர் தூரம் இருக்கும்போது கடைசி அறிவித்தல் விடபடுகிறது வேண்டிய நேரத்தில் பொத்தானை அழுத்துமபோது இது போன்ற தகவல்கள் கிடைக்கின்றன.

வீதியாற் திரும்பியபின்னர் அடுத்ததொகுதி அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. ஏற்கெனவே சிபார்சுசெய்யப்பட்ட பாதையால் போகாதவிடத்து அதற்குப்பதிலாக மாற்றுப்பாதையைத் தெரிவு செய்து சொல்லகூடிய திறன் இப்புதிய கருவிக்குண்டு. போகவேண்டிய பாதையின் நிலைமை அல்லது போக்குவரத்து நெரிசல் போன்ற சந்தர்ப்பங்களிற் பாதை மாறவேண்டியதாயின் இவ்வாறு வழிகாட்டல் பெரிதும் உதவியாக இருக்கும். உலகில் தற்போது பாவனையிலுள்ள இந்தவகைக் கருவிகளில் இக்கருவியே முதன் முறையானது. குடும்பப் பாவனையிலிருக்கும் கார்களில் இது பொருத்தப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.


### இரண்டு திருத்தங்கள்

பக்கம் 7:- 1988 சியோல் - தென்கொரியா சர்வாதிகாரப் போக்கிலிருந்து இறங்கி சுதந்திரமான தேர்தலை நடாத்த முன்வந்தமையால்அங்கு ஒலிம்பிக்போட்டிகள் நடைபெற்றது.

பக்கம் 26:- 'ஜி. பி. எஸ் நவிகேசன்சிஸ்ரம்' என்ற படமும், பாதைகாட்டும் அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்ட படமும் தலைகீழாக மாறியுள்ளது. வாசகர்கள் திருத்திப் பார்த்து, வாசிக்கவும்.

# குருதியில் குளிக்கும் அசோகச்சக்கரம்

*அசோகச் சக்கரத்தை*
*இந்தியா இன்னும் எத்தனை தடவைகள்*
*குருதியில் குளிப்பாட்டும்?*
*கறைபடிந்த கரங்களை*
*பாரதம் எந்தக் கங்கையில் கழுவிக்கொள்ளும்?*
*கடலில் ''அகத்'' தீப்பிடித்தபோதே*
*எங்கள் கற்பனைகள் கழுவேறிக் கொண்டன*
*நல்லூரின் வீதியில்*
*முகத்திரையிட்ட மூவர்ணக்கொடி*
*சேற்றில் விழுந்தது.*
*இந்துமாகடலில்*
*சிங்கமுகச் சின்னத்தில் சீழ்வடிந்தது.*
*கிட்டுவும்*
*குட்டிசிறியும்*
*கூடவந்த எட்டு வேங்கைகளும்*
*இல்லையென்பது நிச்சயமான பின்பும்*
*நெஞ்சம் நம்ப மறுக்கிறதே...*
*நினைவுகள்*
*கரையேறும் அலைகளாகி*
*மீண்டும், மீண்டும் ஓடிவருகின்றனவே*
*ஒருவருடம் உதிர்ந்ததா?*
*முன்னூற்றி அறுபத்தி ஐந்து நாட்கள்*
*எப்படி நகர்ந்தன?*
*அன்னைமடி என்ன சுகம்*
*எத்தனை எதிர்பார்ப்புகளுடன் வந்தார்கள்*
*இமயம் ஏன் இடைமறித்தது?*
*''என்று பார்ப்போம் எம் தலைவனை*
*என்று காணுவோம் எம் மக்களை'' என்று*
*ஓடிவந்தவர் கரைவந்து சேரவில்லை.*
*புத்தபொருமான் சூல்கொண்ட கருவறை*
*பிணந்தின்னிகளைப் பெற்றெடுக்கின்றன.*
*ஆதிசங்கரர் அவதரித்த வீட்டில்*
*கழுகுகள் குடியிருக்கின்றன.*
*நீ தொட்டழித்தது சிற்றெறும்புகளை அல்ல*
*சிறுத்தைகள்.*
*வியாக்கிரக சேனையின் ''மகாரதர்கள்''.*
*நெஞ்சில் விழுந்த ஆழவடு*
*அழியாது.*
*பத்து வேங்கைகளின் பாதச்சுவடுகளை*
*கைகளால் பொத்திக் காப்பாற்றுகின்றோம்.*
*புலிவீரம் தடைவெல்லும்.*
*தமிழீழம் பதில் சொல்லும்.*





— புதுவை இரத்தினதுரை

# இளைய சமுதாயம் துடிப்புடன் எழவேண்டும்

## கேணல் கிட்டு அவர்கள் நினைவாக...

ஒரு தசாப்த காலத்திற்கு முன்பு தேசியத் தலைவரின் மெய்ப்பாதுகாவலர்களில் சில இளையவர்களும் இருந்தனர். இதனை அவதானித்த இயக்கத்தின் மூத்த உறுப்பினர் ஒருவர் ''இவர்களை ஏன் வைத்திருக்கிறீங்கள்? இவர்கள் உங்களைப் பாதுகாப்பார்களா?'' என்று வினாவினார். ''பொறுத்திருந்து பாருங்கள்'' என்று மாத்திரம் தலைவரிடமிருந்து பதில் வந்தது. அன்று இளையவர்களாக இருந்தவர்கள் இன்று தளபதிகளாகவும், துறைப் பொறுப்பாளர்களாகவும் இயக்கத்தின் தூண்களாக, தேசத்தின் சிற்பிகளாக சிறந்து விளங்குகிறார்கள். இவர்களிடம் தான் திறமையும் ஆற்றலும் உண்டு என்பது தலைவரிற்கு தெரியும். இதனால் தான் அவர்களை சிறந்த போராளிகளாக உருவாக்கியிருக்கிறார்.

இவ்வாறான தலைவரினால் தனது 18 வயதிலேயே ஈர்க்கப்பட்டவர் தான் இயக்கத்தின் மூத்த தளபதியான கேணல் கிட்டு அவர்கள். தலைவரின் வழிகாட்டலில் கிட்டண்ணா பல்துறைகளில் திறமையும், ஆற்றலுமுள்ள சகலகலாவல்லவனாக திகழ்ந்தார். இதனால் கிட்டண்ணா யாழ். மாவட்ட தளபதியாக்கப்பட்டார். இங்குதான் அவரது ஆற்றலும், ஆளுமையும் பளிச்சிட்டன. வெறியாட்டம் போட்ட இராணுவத்தினர்களை அடக்கி முகாம்களிற்குள் முடக்கினார். மக்களிற்கான அரசியல் ...லைத் திட்டங்களை திலீபனுக்கூடாக நடாத்தி...ர். சுதந்திரப்பறவைகள், மாணவரமைப்பு, ...னம், கலைபண்பாடு, தமிழீழ ஆய்வு நிறு... போன்ற பல அமைப்புக்களைக் கட்டியெழுப்பி ...பல வெகுசன அமைப்புகளை உருவாக்கினார். அவரது குரலைக்கேட்ட மாத்திரத்திலேயே அடங்கிப்போகுமளவுக்கு சிங்களத்துக்கு சிம்மசொப்பனமாக திகழ்ந்தார் என்றால் அது மிகையாகாது.

> *"கிட்டுமாமா" என சிறுவர்களாலும் ''கிட்டண்ணா'' என சக தோழர்களாலும் ''கிட்டு'' எனத் தலைவராலும் அன்பாகவும், ஆசையாகவும் அழைக்கப்பட்ட கிட்டண்ணா காலத்தின் ஒரு பதிவாகும். அவரது கனவுகளை நனவாக்க, அவர் நம்பிக்கை வைத்திருந்த இளைய சமுதாயம் துடிப்புடனெழுந்து வரவேண்டும்.*
>
> **வீ. மணிவண்ணன்**

வளர்ந்துவரும் புதிய சமுதாயம் எவ்வாறான படிமுறை வளர்ச்சிகளின் ஊடாக வளரவேண்டுமென்பதையறிந்து, அதற்கேற்ப வடிவங்களை போராட்ட காலங்களிலேயே உருவாக்கினார். சிங்கள இனவாத பூதம் இளையவர்களின் மனதைப் பாதிக்க முனைந்ததை, உளவியல் ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்த முற்பட்டதையறிந்து கவலை கொண்டார். இதற்காகவே போராட்ட காலங்களில் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்காத வண்ணம் பார்த்துக்கொண்டார். கலைவிழாக்கள், கோவில், தேவாலய திருவிழாக்கள், இலக்கிய அரங்குகள், விளையாட்டுப்போட்டிகள், கண்காட்சிகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்போன்ற பலவற்றை போர் நெருக்கடியான சூழ்நிலையிலும் தொய்வுறாவண்ணம் நடாத்த உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்.

குடாநாட்டின் பின்தங்கிய பலபகுதிகளில் இலவச கல்வி நிலையங்களை அமைத்தார். வறிய மாணவர்கள் கல்வி கற்பதற்குரிய ஒழுங்குகள் பல செய்தார். அவர்களது கல்வியைத் தொடர போதிய உதவி செய்தார். இவ்வாறான இடங்களில் பாலர் பாடசாலைகள், கல்விக்கூடங்கள், வாசிகசாலைகள், சிறுவர் பூங்காக்கள், சிறுகைத்தொழில் முயற்சிகள் போன்றவற்றை உருவாக்கினார். அவ்வாறானவற்றுக்கு ஆதரவு கொடுத்தார். தமிழீழத்தில் எந்தவொரு மக்களும் பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடாதென கனவு கண்டார்.

பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் ஏராளமான இளைஞர்கள் அறிவியல் ஆர்வத்துடனும் ஆக்கபூர்வமான தேடலுடன் இருப்பார்கள் என்பதை பரிபூரணமாக உணர்ந்து கொண்டவர். இதனால் தான் விடுதலைப்புலிகள் மாணவரமைப்பை உருவாக்கினார். இவ்வமைப்பிற்கூடாக கண்காட்சிகள், விளையாட்டுப்போட்டிகள், சிரமதான வேலைகள், சமுதாய முன்னேற்றச் செயல்கள், எனப்பலவற்றை மாணவர்களின் தேடலுக்கு வடிகாலாய் அமைத்துக் கொடுத்தார். மாணவர்கள் மத்தியில் கல்வியறிவை வளர்ப்பதுடன் நின்றுவிடாது அவர்களது ஆளுமையையும், பல்துறைசார் பண்புகளையும் வளர்க்க வேண்டுமென்றே விரும்பினார்.

உற்சாகமான இளைஞர்களையும், குறும்புத்தனமான இளைஞர்களையும் அவருக்கு நன்கு பிடிக்

கும். அவர்களுடன் கதைத்து அவர்கள் ஆர்வம் கொண்டுள்ள விடயங்களில் தொடர்ந்து கதைத்து உற்சாகப்படுத்துவது கிட்டண்ணாவின் தனிப்பாணியாகும். அவர் தனது மடலில்:-

''இளைய பருவத்தினர் தான் புதுமையையும், புரட்சியையும் உடனடியாகப்புரிந்து கொள்ளக்கூடியவர்களாகவும், ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாகவும் இருப்பதுடன் நடைமுறைப்படுத்துவதற்கும் தாமாக முன்வரக்கூடியவர்களாகவும் உள்ளனர்'' எனக்குறிப்பிட்டார். இளைய சக்தியை கிட்டண்ணா யதார்த்தமாக புரிந்துகொண்டவர்.

தேசவிடுதலை மட்டும் எமது நோக்கமல்ல. சமூக விடுதலையும், மறுமலர்ச்சியும், சீர்திருத்தமும் சேர்ந்ததே எமது போராட்டத்தின் பரிமாணம் என்பதை வலியுறுத்தி வந்தார். எமது சமூகத்தில் புரையோடிக் கொண்டிருக்கும் சாதிப்பாகுபாடு, பெண்ணடிமைத்தனம், மூடநம்பிக்கைகள், பிரதேச வேறுபாடுகள், வர்க்கவேறுபாடுகள் போன்றவற்றை தவிர்க்கவேண்டுமென்ற தனியாத ஆசை கொண்டவராகத் திகழ்ந்தார். இதற்காக பாடுபட்டார். தன்னையே அர்ப்பணித்தார். இளைஞர்களிடம் தான் பூகம்ப சக்தி ஒன்றுண்டு. அவர்களால்தான் எமது சமூகத்தின் விலங்குகளை உடைத்தெறிய முடியும் என அடிக்கடி சொல்லிவந்தார்.

தமிழீழ தேசத்தை உருவாக்குகின்ற சிற்பிகளாக, நிர்மாணிகளாகத்தான் அவருடன் கூடயிருந்த புலிவீரர்களை வளர்த்தார். தமிழ்சமூகத்தின் சீர்திருத்தவாதிகளாகவும், முன்னணிச் சக்திகளாகவும் விளங்குவார்களென எண்ணினார். ஏனைய இளைஞர்களையும் இந்த சமூகத்தின் முன்னோடிகளாக்க பாடுபட்டார். இந்த இளைஞர்களிடம் தான் அந்த மகத்தான சக்தி உண்டு என்பதை பரிபூரணமாக நம்பினார்.

எந்த சக்திகளுக்கும் அடிமைப்படாத பொருளாதார, அரசியல் சுபீட்சமுடைய தமிழீழத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்ற அவாவும், கல்வியும், செல்வமும் நிறைந்த மக்களைக் கொண்ட நாடாக விளங்க வேண்டும் எனும் தலைவரின் விருப்பத்தை பிரதிபலித்தார் கிட்டண்ணா.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்த போது, இந்திய வல்லாதிக்க அச்சுறுத்தலின் காரணமாக நாடுவிட்டு நாடாக இடம் மாறிக்கொண்டிருந்த காலங்களிலும் அவரது எண்ணங்களும், சிந்தனைகளும் தமிழீழத்தைப் பற்றியதாகவே நிறைந்திருந்தது. தமிழீழம் என்ற தேசத்தை இராணுவ, அரசியல், பொருளாதார பண்பாடு பலமான விழுதுகளால் கட்டியெழுப்பப்படல் வேண்டும் என்ற தனது சிந்தனை வடிவங்களை மடல்களிலே வெளிப்படுத்தினார். அவர் எழுதிய கடிதங்கள் ஒவ்வொன்றிலும் தமிழீழம் பற்றிய அவரது கனவுகள், கற்பனைகள், எண்ணங்கள் நிறைந்திருந்தன.

''கிட்டுமாமா'' என சிறுவர்களாலும் ''கிட்டு அண்ணா'' என சகதோழர்களாலும் ''கிட்டு'' எனத் தலைவராலும் அன்பாகவும், ஆசையாகவும் அழைக்கப்பட்ட கிட்டண்ணா காலத்தின் ஒரு பதிவாகும். அவரது கனவுகளை நனவாக்க, அவர் நம்பிக்கை வைத்திருந்த இளைய சமுதாயம் துடிப்புடனெழுந்து வரவேண்டும்.

# கை குலுக்கும் பண்பு எப்படித் தோன்றியது?

**கை** குலுக்கும் பழக்கம் உலகெங்கும் பரவலாக நட்பையும், நல்லுறவையும் காண்பிக்கும் வகையில், கை குலுக்கும் பழக்கம் எப்படி ஆரம்பித்தது தெரியுமா?

முற்காலத்திலிருந்தே கையை வலிமையின் சின்னமாகக் கருதிவந்தார்கள். தொடக்கத்தில் எதிரியை தாக்கவும் மிருகங்களைக் கொல்லவும், ஆயுதங்கள் செய்யவும்தான் கைகளைப் பயன்படுத்தினார்கள். ஒருவரை நோக்கி கையை நீட்டினால், அவரை அடிக்க விரும்பவில்லை. அவருடன் நட்புக்கொள்ளவே விருப்பம் என்னும் பொருள்கொண்டார்கள். எகிப்தியர்கள் தேவதைகளைப் பூசை செய்யும்போது மரியாதை தெரிவிக்கும் வகையில் தமது கைகளை உயர்த்துவது வழக்கம். உள்ளங்கையை உள்ளங்கையுடன் பொருத்துவதை வணக்கம் தெரிவிப்பதாகக் கருதப்பட்டது இந்தியாவிலும் ஆசியாவின் மற்ற பல நாடுகளிலும் இவ்வழக்கம் இன்றளவும் நடைமுறையில் உள்ளது. அராபியர்கள் தம்மைவிட உயர்ந்தவர்களுக்கு மரியாதை செலுத்த அவர்களது கையைப் பிடித்து முத்தமிட்டு வந்தார்கள். இதனால், முத்தமிடுபவர் மனத்தில் ஒரு விதமான தாழ்வு மனப்பான்மை ஏற்படுவதாகத் தோன்றத் தொடங்கியதும் இவ்வழக்கம் நிறுத்தப்பட்டது.

கைகுலுக்கும் பழக்கம் எகிப்து நாட்டில் ஆரம்பித்தது. பண்டைய எகிப்தில் பழக்கமில்லாத ஒருவருடன் நட்புக்கொள்ள விரும்பும்போது அவர்பால் தமது வலதுகையை நீட்டும் வழக்கம் ஏற்பட்டது. மெல்ல மெல்ல, இந்த வழக்கம் ப[illegible]வலாகி இன்று கைகுலுக்குதல் ஒரு சாதார[illegible] நிகழ்ச்சியாகி விட்டது.

.. நகேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# பொது அறிவுப்போட்டி

**சா**ளரம், இந்த இதழ்தொடக்கம் மாதாந்த பொது அறிவுப்போட்டியினை நடாத்துகின்றது. போட்டியில் கேட்கப்படும் கேள்விகளுக்கான சரியான விடைகளைத் தெரிவுசெய்து அனுப்பும் வாசகர்களுக்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக முறையே ரூபா 200-, ரூபா 150-, ரூபா 100- பெறுமதியான 'பரிசு மடல்'களை எழிலகம் நிறுவனம் வழங்கும் அம்மடல்களைக்கொண்டு தேவையான பொருட்களை பரிசுக்குரியவர்கள் எழிலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பரிசுக்குரியவர்களாக தெரிவாகும்பட்சத்தில் அவர்களுக்கான பரிசு பணமாகவே அனுப்பிவைக்கப்படும்.

சரியான விடைகளைத் தெரிவுசெய்து அனுப்பும் வாசகர்கள் குலுக்கல்முறைமூலம் அதிஷ்டசாலிகளாக தேர்ந்தெடுக்கப்படுவர்.

வாசகர்கள் செய்யவேண்டியது இதுதான். கீழே எட்டுக்கேள்விகள் உள்ளன. ஒவ்வொரு கேள்விக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் சரியான விடையினைத் தெரிவுசெய்து ஒருதாளில் விளக்கமாக எழுதி அனுப்பவேண்டும். தபால் உறையின் இடது மூலையில் 'பொது அறிவுப் போட்டி" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். உங்கள் விடைகளை இம்மாத இறுதிக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் அவசியம்.

இங்கே தரப்பட்டுள்ள எட்டுக்கேள்விகளும் மிக இலகுவானவையே. அதேநேரம் சாளரம் கடந்த இதழ்களிலிருந்தே இக்கேள்விகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. பூமி சூரியனைச் சுற்றுகிறது எனக்கூறிய கியாடானோ புருனோ என்ற விஞ்ஞானிக்கு-
   - (i) நோபல் பரிசு வழங்கப்பட்டது.
   - (ii) ஜனாதிபதி பதவி வழங்கப்பட்டது.
   - (iii) உயிரோடு எரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது.

2. நரம்புத்தளர்ச்சி சம்பந்தப்பட்ட ஓர் உளநோய்-
   - (i) மாரடைப்பு.
   - (ii) பயம் – பதற்றம்.
   - (iii) எயிட்ஸ்.

3. உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் தொங்குதோட்டம் -
   - (i) 1940 இல் அமைக்கப்பட்டது.
   - (ii) கி. பி. 17 ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது.
   - (iii) கி. மு. 6 ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது.

4. அண்மையில் லண்டன் சென்று 'சிம்பனி' என்ற இசைவடிவத்தைப் படைத்த இசையமைப்பாளர் -
   - (i) கே. வி. மகாதேவன்
   - (ii) இளையராஜா
   - (iii) ஜி. வெங்கடேஷ்

5. பிக்பென் (BIGBEN) என்பது -
   - (i) ஓர் விமானம்
   - (ii) புகழ்பெற்ற கடிகாரம்
   - (iii) ஒருவகைப் பறவை

6. 'போர் உலா' என்ற நூலை எழுதியவர் -
   - (i) கப்டன் மலரவன்
   - (ii) மேஜர் கணேஸ்
   - (iii) சாண்டில்யன்

7. 'மைக்கிறேன்' என்பது -
   - (i) பாரம்தூக்கும் கருவி
   - (ii) ஒருவகைத்தலைவலி
   - (iii) தொலை நோக்கி

8. அமெரிக்காவின் உளவு அமைப்பு -
   - (i) ஐ. ஏ. எஸ்
   - (ii) சி. ஐ. ஏ
   - (iii) ஏ. எஸ். ஏ

உங்கள் பதில்களை தாமதிக்காமல் எழுதி அனுப்பவேண்டிய முகவரி -

பொது அறிவுப் போட்டி
சாளரம்
வேம்படி வீதி
யாழ்ப்பாணம்.

# 'ஆரணி மில்ஸ்'

நகரில் நாணயமான சேவை!

**நெல் உடைத்தல்**

**பயறு உழுந்து திரித்தல்**

**அரிசி தீட்டல்**

**மாவு அரைத்தல்**

சகல தேவைகளையும் நேரமான
முறையில் நிறைவேற்றித் தருவோம்

# ஆரணி மில்ஸ்

246, நாவலர் வீதி
(இலுப்பையடிச்சந்தி)
யாழ்ப்பாணம்


## திருத்தம்

கடந்த சாளரம் இதழின் இப்பக்க விளம்பரத்தில் வடமாநில சுருட்டுத் தொழிலாளர் சங்கம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கம் என்பதே சரியானது.

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

தூய்மையான
தரமான சேவை!

◆

நெல் உடைத்தல்
அரிசி தீட்டல்
மாவு அரைத்தல்
மிளகாய், தானியங்கள்
திரித்தல்.

◆

# சீ. எஸ். எஸ். கிறைண்டிங் மில்

கனகம்புளியடிச் சந்தி, சரசாலை,
சாவகச்சேரி